ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 01 24.09.2021 வெள்ளிக்கிழமை இதழ் : 293 பக்கங்கள் : 16

### தியாகி திலீபனுக்கு சுடரேற்றியவேளை

# கஜேந்திரன் எம். பி. கைது

## யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு வாக்குமூலம் பெற்ற பின்னர் பிணையில் விடுதலை

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24**

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட மூவர் நேற்று பிற்பகல் நல்லூரில் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பொலிஸ் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.** 15



## மின்னல் தாக்கி ஒருவர் பலி! மற்றுமொருவர் படுகாயம்

### வெற்றிலைக்கேணியில் துயரம்

வடமராட்சி, செப். 24

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இடைக்காடு வெற் 15

## யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த மூன்று பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்.மாவட்டத்தில் உயிரிழந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த சுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன் (வயது-70), அரியமலர் குணரட்ணம் (வயது 66)ஆகி யோருக்கும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த ஏ.இராசதேவி (வயது 58) என்பவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## திலீபன் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

### யாழ்.பொலிஸாரின் விண்ணப்பம் ஏற்பு

யாழ்ப்பாணம், செப். 24

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு தடை உத்தரவு வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இந்தத் தடை உத்தரவு 15

## கஜேந்திரன் எம். பி. கைது; சிறப்புரிமையை மீறும் செயல்

### சிறிதரன் எம்.பி கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 24

தமிழின விடுதலைக்காக, காந்திய வழியில் தன் உயிரை ஆகுதியாக்கிய தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் 15

## ஜீ. சி. ஈ. சா/த பரீட்சை பெறுபேறு வெளியானது

கொழும்பு, செப். 24

கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

பரீட்சை பெறுபேறுகளை www.doenets.lk என்ற இணையதளத்தில் பார்வையிட முடி 15

## மாகாணசபைகளுக்கு தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும்

### அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு



கொழும்பு, செப். 24

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப் பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவின் பொதுவான 15

## உடுவில் பிரதேச செயலகத்தின் அலுவலர் தொற்றால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 24

உடுவில் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றிவந்த திருமதி தமிழினி பிரபாகரன் கொரோனா தொற்றினால் உயிரிழந்தார்.

இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட குறித்த உத்தியோகத்தர் ஏற் 15

## 72 பேர் தொற்றால் பலி!

கொழும்பு, செப். 24

நாட்டில் நேற்று கொரோனா தொற்றால் 72 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டில் மரணமானோரின் 15

# ஊரடங்கை நீக்கும்போது நாட்டை முழுமையாக திறக்கவேண்டாம்

### சுகாதார அதிகாரிகள் அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, செப். 24

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப் படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை தளர்த்தும் முடிவை எடுக்கும்போது நாட்டை முழுமையாக திறக்கவேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் ஜெனரல் ஹேமந்த ஹேரத் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை முழுமையாக ஒரே நேரத்தில் திறக்க பரிந்துரைக்கப்படவில்லை என்றும் நாடு முழுமை 15



## இப்படியும் நடக்கிறது...!

ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவதில் ஏற்பட்ட குழப்பங்கள் தெரிந்தவைதான். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து கடிதம் அனுப்ப, அதனால் அவர்கள் மீது கண்டனம் தெரிவிக்கப்போய், புளொட் குறித்து சுமந்திரன் மிகக் காட்டமாகவே கருத்துச்சொல்ல, அதற்கு பதிலளித்து சித்தார்த்தன் வழமைக்கு மாறாக கருத்துச் சொல்ல, தமிழர் அரசியல் களம் கடந்த வாரம் கலகலப்பாக இருந்தது.

தமிழ் அரசுக் கட்சியிலேயே தனது கடிதத்திற்கு எதிர்ப்பு கிளம்பியிருக்க பங்காளிக் கட்சியை ஏன் சுமந்திரன் சீண்டிப்பார்த்தார் என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

நேற்றைய தினம் புளொட் தலைவர் சித்தார்த்தன் பற்றி எழுதியிருந்ததை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அவர் எப்போதும் யார் மனதையும் புண்படுத்தாமல் நடந்துகொள்கின்ற ஒருவரே இவ்வாறு கோபப்படுகின்றார் என்றால் அது கவனத்திற்குரியது என்றும் எழுதியிருந்தேன்.

யுத்த வெற்றியில் பங்கு கொண்டாடியவர் சித்தார்த்தன் என்று சுமந்திரன் சொல்ல, பதிலுக்கு புலிகளை விசாரிக்கச் சொல்வது அரசின் நிகழ்ச்சி நிரல் என்று சித்தார்த்தன் பதிலளித்திருந்தார்.

அதாவது பகிரங்கமாகவே சுமந்திரன் அரசின் நிகழச்சி நிரலுக்கு அமையவா இத்தகைய கோரிக்கையை முன்வைக்கின்றார் என்று சித்தார்த்தன் சொன்ன சத்தம் மறைந்து விடுவதற்கு முன்னதாகவே-

சர்வதேச சமூகத்திற்கு இரு முகங்களை காண்பிக்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியை மாற்றவேண்டும். ஜனநாயகத்திற்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட இந்த அரசு நீடித்தால் தமிழ் மக்களுக்கு பேராபத்தாகும் என்று சுமந்திரன் பொங்கி எழுந்திருந்தார்.

அவர் சொல்வது மறுப்புக்குரியதல்ல. ஆனால், அதை அவர் சொல்கின்ற நேரம்தான் யோசிக்க வைக்கின்றது.

ஒன்று, செய்யக்கூடியதை மட்டுமே எப்போதும் சொல்லமுனைகின்ற சுமந்திரன், இந்த அரசாங்கத்தை மாற்றவேண்டும் என்கிறார்.

அண்ணளவாக மூன்றில் இரண்டு பங்கு அசுர பலத்துடன் இருக்கும் இந்த அரசை அடுத்த தேர்தல்வரை மாற்றமுடியாது என்பது சுமந்திரனுக்கு தெரியாததல்ல. அடுத்த தேர்தலுக்கு இன்னும் பல ஆண்டுகள் இருக்கின்ற நிலையில் இந்த அரசை மாற்றவேண்டும் என்று கோரிக்கை வைப்பது, தான் அரசாங்கத்திற்கு எதிரான ஆள் என்று தமிழ் மக்களுக்கு கூறுவதற்கு வேண்டுமானால் உதவலாம்.

ஆனால், இன்று சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த அரசுக்கு ஆதரவு ஆட்டம் கண்டுவரும் வேளையில், அந்த அரசை தமிழர் தரப்பு வீழ்த்துவதற்கு முயற்சி செய்வதாக சிங்கள மக்கள் அறிந்தால், அதனை முறியடிக்கவே 'பொங்கி' எழுவர் என்பதும் சுமந்திரனுக்கு தெரியததல்ல.

சிலவேளை இவர் இப்படிக் கூறுவது அரச தரப்பிற்கு விருப்பத்திற்கு உரியதாகக்கூட இருக்கலாம்.

உங்களால் தெரிவுசெய்யப்பட்ட இந்த அரசை தமிழர்கள் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று மஹிந்த தரப்பு தெற்கில் பிரசாரம் செய்ய வேண்டுமானால் சுமந்திரனின் கருத்து உதவலாமே தவிர, இந்த அரசை மாற்றுகின்ற சுமந்திரனின் முயற்சிக்கு தமிழ் மக்கள் முக்கியத்துவம் கொடுப்பார்களா என்பது கேள்விக்குரியதே.

**- ஊர்க்குருவி**

### எனது மகனை விடுதலை செய்யுங்கள்

# தமிழ் அரசியல் கைதியின் தாய் நாமலிடம் கண்ணீர் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 24

பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுதலை செய்யுமாறு கோரியும், உடனடியாக இதற்கு தீர்வு ஒன்றை சொல்லிவிட்டு செல்லுமாறும் தாயொருவர் கண்ணீர்விட்டு அழுத சம்பவம் நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தி திட்டங்களை மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்கும், மேலும் பல அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவும் மட்டக்களப்பிற்கு வருகைதந்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடமே சிறையில் அடைக்கப்பட்டுள்ள தனது மகனை விடுதலை செய்யுமாறு தயார் கண்ணீர் கோரிக்கை விடுத்தார்.

வந்தாறுமூலையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் பங்கேற்ற நாமல் ராஜபக்ஷவுக்கு மாலை அணிவித்து தனது மகன் விடுதலை குறித்து இவ்விடத்திலே பெற்றுத்தந்துவிட்டுப் போகுமாறு அவர் கண்ணீருடன் கேட்டிருந்தார். (ஐ)

# கஜேந்திரன் கைது சீ. வீ. கே. கண்டனம்!



யாழ்ப்பாணம், செப். 24

தியாக தீபம் திலீபனை நினைவு கூர்ந்தமைக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட மூவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்தமையை வன்மையாக கண்டிக்கின்றேன்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி செலுத்த முயன்ற கஜேந்திரன் எம். பி. கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உயிரழந்தவர்களை நினைவு கூருவது என்பது எமது அடிப்படை உரிமை, அதிலும் அகிம்சை வழியில் எமது இன விடுதலைக்காக உண்ணா நோன்பு இருந்து ஆகுதி ஆகிய தியாகி திலீபனை நினைவு கூராமல் தடுப்பது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறினார். (ஐ)

# கிளிநொச்சியில் மூதாட்டி ஒருவர் தொற்றால் மரணம்!

கிளிநொச்சி, செப். 24

கிளிநொச்சியில் உயிரிழந்த மூதாட்டிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரின் உடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் நேற்று யாழ். போதானா மருத்துவமனை ஆய்கத்தில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையிலேயே இந்த விடயம் வெளியானது.

இவ்வாறு உயிரிழந்தவர் திருமதி சண்முகம் (வயது 88) என்று பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 24.09.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2 — 24.09.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
24.09.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# அந்த உரை சொல்லும் செய்தி?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள பொதுச் சபையின் 76ஆவது கூட்டத் தொடரில் ஆற்றியிருக்கும் உரை கூறும் செய்தி என்ன? நல்லிணக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கும் ஜனாதிபதி, பொறுப்புக்கூறலில் வெளியக தலையீடுகளை மறுத்திருக்கின்றார். தேசிய நிறுவனங்களின் ஊடாகவே நல்லிணக்கம் சாத்தியம் என்று கூறியிருப்பதன் மூலம், உள்ளக பொறிமுறையில் தனது அரசாங்கம் உறுதியாக இருப்பதையே வலியுறுத்தியிருக்கின்றார். அவ்வாறானதோர் உள்ளக பொறிமுறை ஒன்றுடன் இணைந்து பணியாற்றுவதற்கு வருமாறுதான், தமிழ் புலம்பெயர் சமூகத்திற்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்யும் பிரதான கட்சிகளும் தமிழ் புலம்பெயர் அமைப்புகள் பலவும் சர்வதேச விசாரணை ஒன்றை கோரி வருகின்ற நிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய, ஐ. நாவில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். ஓர் இறைமையுள்ள நாடு என்னும் வகையில் இலங்கையின் நல்லிணக்க பொறிமுறையில் ஓர் எல்லைக்கு மேல் வெளித்தரப்புக்கள் தலையீடு செய்வதற்கு மட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்த மட்டுப்பாடுகளை மனதில் கொண்டே அவரின் உரை அமைந்திருக்கின்றது.

தேர்தல் காலத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் நாட்டை காட்டிக் கொடுத்துவிட்டதாகவும், தாம் அதிகாரத்திற்கு வந்தால், ரணில் - மைத்திரி அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிரேரணையை நிராகரிப்போம் என்றும் பொதுஜன பெரமுனவினர் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர். அதிகாரத்தை கைப்பற்றியதை தொடர்ந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலிருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகும் முடிவை எடுத்திருந்தது. அரசாங்கம் இவ்வாறு விலகினாலும்கூட, இலங்கையின் மீதான மனித உரிமைசார் அழுத்தங்கள் நின்றுவிடப் போவதில்லை என்பதை அரசாங்கம் தெளிவாகவே அறிந்திருக்கின்றது.

ஆனால், சிங்கள கடும்போக்கை தங்களின் தேர்தல் முதலீடாகக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களால், மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செல்ல முடியாது. எனினும், ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்னைகளே இல்லையென்று கூறியிருந்த ஜனாதிபதியின் கருத்துக்களில், தற்போது சில மாற்றங்கள் தெரிகின்றன. தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பொருளாதார பிரச்னை மட்டுமே உண்டு என்று கூறியிருந்த நிலையில், இன்று ஒட்டுமொத்த நாடே பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் யாதார்த்தத்தை, எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை அரசாங்கத்தால் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. புலம்பெயர் அமைப்புகளை பயங்கரவாத அமைப்புக்களாக தடை செய்துவிட்டு, தற்போது அவர்களை உள்ளக பொறிமுறையுடன் இணைந்து செயல்பட வருமாறு அழைப்பது முற்றிலும் முரண்பாடான விடயமாகும்.

ஆனால், ஒரு விடயம் வெள்ளிடைமலை. தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற சர்வதேச சுயாதீன விசாரணையை இந்த அரசாங்கம் ஒருபோதுமே ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அதேவேளை, இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்களுக்கும் இந்த அரசாங்கம் ஒருபோதும் செவிசாய்க்காது. ஏனெனில், போரை வழிநடத்தியவரே, அந்த போரில் தவறு செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்வது நடவாத காரியம். அவ்வாறு ஏற்றுக் கொண்டால் முதல் குற்றவாளியாக முன்னாள் பாதுகாப்பு செயலாளரான ஜனாதிபதி கோட்டாபயவே இருக்க நேரிடும்.

தனது உரையில் உள்ளக நிறுவனங்களின் ஊடான நல்லிணக்கம் என்று அவர் குறிப்பிட்டிருப்பதன் உள்ளடக்கம் இதுதான். அதாவது, எங்களை வேறு எவரும் விசாரிக்க அனுமதிக்கமாட்டோம். எங்களை நாங்களே விசாரித்துக் கொள்வோம். இந்த நிலையில் தமிழர்களின் விருப்பமான சர்வதேச விசாரணை என்பது, இந்த ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் இருக்கின்ற வரைக்கும் நடக்கும் ஒன்றாக தெரியவில்லை. இதுதான் ஜனாதிபதியின் உரையின் சாராம்சம்.

# ஜனாதிபதியின் ஐ. நா. உரை!

**- அலசுவது இராஜதந்திரி -**



*ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பேசியபோது அந்த மாபெரும் சபையின் கதிரைகளே அவரின் பேச்சை செவிமடுத்தது போல விரல்விட்டு எண்ணக்கூடியளவு உறுப்பினர்களே சபை மண்டபத்தில் அமர்ந்திருந்தனர்.*

*நேற்று முன்தினம் இலங்கை நேரப்படி இரவு 9.30 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது உரையை ஐக்கிய நாடுகள் சபையில் நிகழ்த்தினார். ஐ. நா சபையில் சர்வதேச ரீதியாக பிரபலமான தலைவர்கள் சரச்சைக்குரிய சர்வதேச விடயங்கள் குறித்து உரையாற்றும்போதே, ஐ. நா. கேட்போர் மண்டபம் பார்வையாளர்களால் நிறைந்திருக்கக் காணப்படும்.*

*ஆனால், இலங்கை போன்ற உள்நாட்டுப் பிரச்னைகளால் பாதிக்கப்பட்ட சிறிய நாடுகளின் தலைவர்கள் உரையாற்றும்போது வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமது நாடுகள் சம்பந்தப்பட்ட வேறு விடயங்களையே ஐ. நாவின் ஏனைய சிறிய மண்டபங்களில் இருந்து ஆராய்வார்கள். அல்லது தமது ஹோட்டல் அறைகளில் ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். இருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுகின்ற ஒவ்வொரு தலைவரின் உரையின் பிரதியும் அனைத்து வெளிநாட்டு தலைவர்களுக்கும் ஏனைய முக்கிய பிரதிநிதிகளுக்கும் ஐ. நா. சபையால் வழங்கப்பட்டிருக்கும்.*

*இந்த நிலையில் இலங்கையில் இனப் பிரச்னை ஒரு தீவிரவாதப் பிரச்னையாக வடிவம் பெற ஆரம்பித்த எண்பதுகளின் ஆரம்பத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ. நா. சபையில் உலக நாடுகள் பலவும் ஆர்வம் காட்டியிருந்தன. ஆனால், தற்போது இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இலங்கை சம்பந்தப்பட்ட விடயங்கள் ஐ. நா. உறுப்பு நாடுகளால் பெரிதும் ஆர்வத்தோடு நோக்கப்பட்டிராத நிலையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ. நா. சபையில் உரையாற்றிய போது காணப்பட்டிருந்தது.*

*ஐக்கிய நாடுகள் சபையில், ஆப்கானிஸ்தான் விவகாரம் மற்றும் அங்கு தலிபான்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களே இத்தடவை முக்கியம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றியபோது பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவை தொடர்பாக இலங்கையில் ஓர் உள்ளக பொறிமுறையே ஏற்படுத்தப்பட வேண்டும் என் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.*

*பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் என்பவை பற்றி ஜனாதிபதி தெரிவித்துள்ளவற்றை நோக்கும்போது வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து பன்னிரெண்டு வருடங்களாகியும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் எதுவும் இதுவரை அணுகப்படாதுள்ளதை ஜனாதிபதியே சர்வதேச அரங்கில் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.*

*எனவே, புலம்பெயர்ந்த தமிழர்கள் மாத்திரமல்ல. இலங்கையில் நேரடியாகவே பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் சர்வதேச சமூகத்தை தமது பிரச்னைகளை அணுகுமாறு கோருவதற்கு உள்ளகப்பொறிமுறை வலுவற்றுள்ளதே முக்கிய காரணமென்பதையும் சர்வதேச சமூகமும் ஜனாதிபதியின் உரை மூலமாக அறிந்து கொள்ளும் என்றே கருத முடியும்.*

*மறுபுறத்தே ஜனாதிபதியின் உரையில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கூறல், நீதிவழங்கல் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை நோக்குகையில், இம்மூன்று விடயங்களும் உரிய விதத்தில் அணுகப்படாதபட்சத்தில் இலங்கையில் சமாதான - சகவாழ்வென்பது ஒரு பகல் கனவாகவே இருக்கும்.*

*ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்கு முன்பதாக புலம்பெயர் இலங்கைத் தமிழர்களையும் நல்லிணக்க பேச்சுக்களில் பங்குபெற முன்வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.*


*இதற்குப் பதிலளித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன், தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இலங்கையில் பேச பின்வாங்கும் அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை பேச்சுக்கு அமைப்பதில் அர்த்தமில்லை என்று கூறியுள்ளார்.*

*இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னைகளை பொறுத்தவரை புலம்பெயர்ந்த தமிழர்கள் தவிர்க்கப்பட முடியாத ஒரு சக்தியாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கையின் வடக்கு - கிழக்கு சர்ச்சையை பொறுத்தவரை கடும்போக்கான அமைப்புகள் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலேயே காணப்படுகின்றது. இதன்காரணமாக புலம்பெயர்ந்த தமிழர்களை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்திருப்பது வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது.*

*இந்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களையும் உள்ளடக்கிய ஒரு பரந்து பட்ட பேச்சுக்கு தயாராக வேண்டியதே காலத்தின் தேவையாக இருக்கின்றதென்பதையே ஜனாதிபதி விடுத்த அழைப்பின் மூலமாக அறிய முடிகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 24 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 08
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
நீண்ட நாளாக திட்டமிட்ட விஷயங்களில் ஒன்று நிறைவேறும். சிறு தடைகள் தாமதங்கள் இருந்தாலும் மன நிறைவளிக்கும் நாள் மனநிறைவும் மகிழ்ச்சியும் தரக் கூடிய நாளாக இருக்கும்.

**இடபம்**
நிதி விஷயமாக தீட்டியிருந்த திட்டங்கள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இலாபம் இருமடங்காக இருக்கும். குடும்பத்தில் முன்பு ஏற்பட்ட குழப்பங்கள் இன்று தீரும்.

**மிதுனம்**
சிரமங்கள் குறையும். நல்ல பலன்கள் அதிகரிக்கும். பணியாளர்கள் பதவி உயர்வால் நன்மை அடைவார்கள். தொழில் செய்பவர்கள் திருப்தியான வருமானம் பெறுவர்.

**கடகம்**
எதிர்பாராத செலவு ஒன்று ஏற்படும். கலகலப்பான நாள். வாகனப் பழுது, வீட்டு பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். பொதுப்படையாக இயல்பான நிலையே இன்று தொடரும்.

**சிம்மம்**
சிறப்பான நாளாக இன்று அமையும். வருமானம் திருப்தியாக இருக்கும். சகோதரரால் உதவிகள் கிடைக்கும். உறவினர் வருகை ஏற்படும். எதைச் சொன்னாலும், செய்தாலும் கவனம் தேவை.

**கன்னி**
மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு நன்மை அடைவீர்கள். சிரமம் நீக்கியதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டிய நாள். அன்றாடப் பணிகளில் கவனம் செலுத்துங்கள்.

**துலாம்**
வேலைப்பளு சற்று அதிகரிக்கும். வருமானம் பெருகும். குடும்பத்தை பொறுத்தவரை இனிமையான சூழல் நிலவும். உங்கள் பிரச்னை சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

**விருட்சிகம்**
சலுகைகள் கிடைப்பதில் தடை உருவாகி நீங்கும். தொழில் செய்பவர்கள் சீரான முன்னேற்றம் காண்பர். சுபநிகழ்ச்சி ஒன்று திடீரென முடிவாகும். நேற்றைய டென்ஷன் நீங்கும்.

**தனுசு**
எதிர்பார்த்த விஷயம் நடைபெறாது. நன்மைகள் கிடைக்கும். தொழிலில் ஓரளவு வளர்ச்சி உண்டு. வேலையில் முன்னேற்றம் காண்பீர்கள். பயம் நீங்கும். சிறு மருத்துவ செலவு ஏற்படக்கூடும்.

**மகரம்**
சகோதரருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு தீரும். பணியில் கவனமாக நடக்காவிட்டால் சிரமம் ஏற்படக்கூடும். உங்களின் வேலைப்பளுவுக்கு ஏற்ப வருமானம் அதிகமாகும்.

**கும்பம்**
குடும்பத்தினர் இடையே இணக்கமான சூழ்நிலை நிலவும். பயணம் மேற்கொள்ள திட்டமிடுவீர்கள். கவனம் தேவை. ஆன்மிக ஈடுபாடு வரும். கவலைகள் குறையும்.

**மீனம்**
எதிலும் சற்று எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். திட்டங்களில் கவனமாக இருக்க வேண்டிய நாள் இது. ஓரளவு முன்னேற்றம் காண முடியும். குடும்பத்தில் சுமுகமான சூழல் உண்டு.

# அ.தி.மு.கவை பழிவாங்குவது மட்டுமே தி.மு.க. அரசின் வேலையாக இருக்கிறது

## தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துவைத்து எடப்பாடி உரை

சென்னை, செப். 24

“நாம் வலிமையான எதிர்க்கட்சியாக இருக்கிறோம். இப்போதைய தி.மு.க. ஆட்சியின் தில்லுமுல்லுகளை மக்களிடம் நாம் எடுத்துச் செல்ல வேண்டும். தி.மு.க. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்துவிட்டது. எதிர்க்கட்சியான அ.தி.மு.கவை பழிவாங்குவதை மட்டுமே இப்போது வேலையாக செய்து வருகிறது” எனக் கூறியிருக்கின்றார் முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி.

தமிழகத்தில் நடக்கும் ஒன்பது மாவட்ட உள்ளாட்சி ஊரகத் தேர்தல்களுக்கான பிரசார மற்றும் ஆலோசனைக் கூட்டங்களை நேற்று திருப்பத்தூரில் அவர் ஆரம்பித்தார். அதன் பின் பேசிய எடப்பாடி பழனிசாமி தெரிவித்ததாவது:

“இந்த நான்கு மாத காலத்தில் தி.மு.க. ஆட்சியின் வேலை என்னவென்றால் அண்ணா தி.மு.க காரர்கள் மீது வழக்குப் போடுவது, அவதூறு பிரச்சாரம் செய்வது, முன்னாள் அமைச்சர்கள் வீட்டில் அதிரடி சோதனைகளை நடத்துவதுதான் அவர்களது பணியாக இருக்கிறது. வாக்களித்த மக்களைப்பற்றி சிந்திக்க நேரம்இல்லை.



மக்களுக்கு எந்த நன்மையும் இந்த நான்கு மாதத்தில் கிடைக்கபெறவில்லை. நானும் நான்கு ஆண்டு காலம் 2 மாதம் முதலமைச்சராக இருந்தேன். நாங்கள் நினைத்திருந்தால் எவ்வளவோ வழக்குகள் போட்டிருக்கலாம். நாங்கள் அப்படி செய்தோமா? இல்லை” என்று தெரிவித்தார்.

# கொடநாடு வழக்கு; தனிப்படை விசாரணை

சென்னை, செப். 24

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக ஏ.டி.எஸ்.பி. கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான தனிப்படை அதிகாரிகளின் நேற்று இரண்டாவது நாளாக விசாரணை நடத்தினார்கள்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் 8 மற்றும் 9வது நபர்களாக குற்றச்சாட்டப்பட்டுள்ள சந்தோஷ் சாமி, மனோஜ் சாமியிடம் தனிப்படை பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



உதகையில் உள்ள பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இருவரிடமும் 10 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இவ் வழக்கு தொடர் பாக இரண்டாவது நாளான நேற்றும் சந்தோஷ் சாமி, மனோஜ் சாமியிடம் ஏ.டி.எஸ்.பி. கிருஷ்ண மூர்த்தி, டி.எஸ். பிக்கள் சந்திரசேகர், சுரேஷ் ஆகி யோர் விசாரணை நடத்தினர்.

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சதீஷன், பிஜின் குட்டி ஆகியோர் விசாரணைக்கு ஆஜர் ஆனார்கள்.

ஏற்கனவே, 29 பேர் விசாரிக்கப்பட்ட நிலையில், குற்றச்சாட்டப்பட்டோரிடம் தனிப்படை பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ‘நீட்’ தேர்தவுக்கு எதிரான தமிழக அரசின் போராட்டம் தொடரும் கல்வி அமைச்சர்

சென்னை, செப்.24

“நீட் தேர்வுக்கு எதிரான தமிழக அரசின் சட்ட போராட்டம் தொடரும்” என கோவையில் தமிழக அமைச்சர் அன்பில் மகேஷ் கூறினார்.இந்திய தொழில்கள் கூட்டமைப்பு, தனியார் பள்ளிகள் தாளாளர், நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் கோவையில் நேற்று நடந்தது. இந்த நிகழ்ச்சியில், கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்றார்.

இதைத்தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியதாவது: ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் திறப்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. ஒன்றாம் வகுப்பு முதல் பள்ளிகளை திறக்க தனியார் பள்ளிகள் கேட்டு வருகின்றனர்.

பெற்றோர் மத்தியில் தற்போது வரை கொரோனா அச்சம் இருப்பதால் பள்ளி திறப்பு பற்றி முடிவு செய்யவில்லை. கொரோனா பரவல் கட்டுக்குள் இருப்பதை பொறுத்தே பள்ளிகள் திறப்பு பற்றி முடிவு எடுக்கப்படும்.

6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரையான பள்ளிகள் திறப்பு குறித்து முதல்வர் கவனத்திற்கு கொண்டு சென்று உள்ளோம். நவம்பர் முதல் கேரளாவில் பள்ளிகள் திறக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களுக்கான தேர்வில் வயது வரம்பு உயர்த்த பரிசீலனை செய்து வருகிறோம். நீட் தேர்வு தொடர்பாக சட்ட போராட்டம் நடத்தப்படும். பள்ளிகளில் உளவியல் ஆசிரியர்கள் தேவை உள்ளது. அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அன்பில் மகேஷ் கூறினார்.

# தேர்தலை புறக்கணிக்கும் ஒரு கிராமம்

விழுப்புரம், செப் 24

தமிழகத்தில்விழுப்புரம்மாவட்டம் செஞ்சி அடுத்த அவியூர் ஊராட்சிக்கு உட்பட்ட விற்பட்டு கிராம மக்கள் உள்ளாட்சி தேர்தலை புறக்கணிக்கப்போவதாக அறிவித்து வீடுகளில் கறுப்பு கொடி கட்டியும், சுவரொட்டிகளை ஒட்டியும் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.




அவியூர் ஊராட்சியில் 1100க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருப்பதால் தொடர்ந்து அந்த கிராமத்தினரே ஊராட்சி மன்ற தலைவர்களாக பொறுப்பேற்று வருகின்றனர். அந்த ஊராட்சிக்கு உட்பட்டு விற்பட்டு கிராமத்தில் குறைவான வாக்காளர்களே இருப்பதால் அவர்களால் தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றி பெற முடிவதில்லை.

இதனால் விரக்தி அடைந்த விற்பட்டு கிராமத்தினர், ஜனநாயக அடிப்படையிலான எந்த வசதிகளும் தங்களுக்கு கிடைப்பதில்லை என்றும் விற்பட்டு கிராமத்தை தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டும் என்றும் பலமுறை கோரிக்கைவைத்தனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் உள்ளாட்சி தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்து வீடுகளில் கறுப்பு கொடி கட்டியுள்ளனர்.

# அத்தியாவசிய பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## உணவு இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 24

**அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில் உள்ள சிரமம் காரணமாக எதிர்காலத்தில் நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

உணவு இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இதனை குறிப்பிட்டார்.

சுமார் 800 கொள்கலன்கள் வரையான இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் ஏற்கனவே துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மாதங்களுக்கு போதுமான உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதற்காக உணவுப்பொருள்களின் பங்குகளை விரைவில் விடுவிப்பது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

அவ்வாறு இல்லையெனில், அனைத்து இறக்குமதிகளும் நிறுத்தப்படுவதுடன், நாட்டின் அத்தியாவசிய உணவு பொருள்கள் ஒக்ரோபர் மாத இறுதி வரை மட்டுமே கிடைக்கும் என தெரிவித்துள்ளார்.

# இலவச மருத்துவ ஆலோசனைக்கு விசேடமாக தொலைபேசி இலக்கம்

கொழும்பு, செப். 24

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு, மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ள விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, எந்த நேரத்திலும் 247 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மருத்துவர் ஒருவரை தொடர்புகொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

மேலும் குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மருத்துவரை தொடர்புகொண்டதன் பின்னர், நோயாளியின் நோய் நிலைக்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆர்வத்துடன் தடுப்பூசி ஏற்றிவரும் மட்டக்களப்பு இளைஞர்,யுவதிகள்

மட்டக்களப்பு, செப். 24

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்டு வரும் நிலையில் பெருமளவான இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளை ஏற்றிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பல பகுதிகளில் நேற்றைய தினம் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு கூழாவடி விக்னேஸ்வரா திருத்தொண்டர் மண்டபத்தில் நேற்று 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரனின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் கிரிசுதனின் தலைமையில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, கல்லடி சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பகுதிகளிலும் 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

பெருமளவான இளைஞர், யுவதிகள் நேற்று தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு ஆர்வத்துடன் வந்தனர்.

(அ)

# வீடு புகுந்து 7 பேருக்கு படுகாயம் விளைவித்த மூன்று பேர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் சரண்!

## பொலிஸார் ஆட்பேசபனை தெரிவிக்காததால் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோண்டாவிலில் இடம்பெற்ற வன்முறையில் ஒருவருக்கு கை துண்டாடப்பட்டும் மேலும் 6 பேர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சந்தேக நபர்கள் மூவரும் முற்படுத்தப்பட்டபோது, கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத நிலையில் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டது.

கோண்டாவிலில் வீடொன்றுக்குள் புகுந்த அங்கிருந்த 7 பேரை கூரிய ஆயுதங்களினால் தாக்கிப் படுகாயம் விளைவித்தும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை தாக்கிச் சேதப்படுத்தியும் தீவைத்தும் வன்முறையில் ஈடுபட்டதாக கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பி அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த ஜூலை 5ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் அடையாள அணிவகுப்புக்குட்படுத்த மன்று உத்தரவிட்டிருந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக சந்தேக நபர்கள் நால்வரும் ஓகஸ்ட் 19ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய 3 சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் நேற்று முன் தினம் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேக நபர்கள் மூவரை பிணையில் விடுவிக்க அவர்களின் சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை மன்றில் முன் வைத்தார்.

பிணை விண்ணப்பத்துக்கு மன்றில் தோன்றியிருந்த கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

அதனால் சந்தேக நபர்கள் மூவரையும் தலா 5 லட்சம் ரூபாய் 2 ஆள் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனால் முக்கிய சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தும் செயல் முறையும் இல்லாமல் போயுள்ளது. (அ-3)

# அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் அதிகரிப்பு

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் சில பொருள்களுக்கு நிர்ணய விலையை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட பின்னர், அதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி, தனிநபர் வர்த்தகம் மற்றும் நிறுவனங்களுக்காக அறவிடப்படும் அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தனிநபர் வியாபாரங்களுக்காக விதிக்கப்பட்ட 1,000 ரூபாய் அபராதம் 10,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் ஐந்து இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இரண்டாவது தடவையாகவும் அதிகூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் பட்சத்தில் 2,000 ரூபாய் தண்டப்பணத்துக்காக 20,000 ரூபாயும், 2 இலட்சம் ரூபாய்க்கு 10 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படவுள்ளது.

நிறுவனம் ஒன்றில் குறித்த தவறு இழைக்கப்படும் பட்சத்தில் 1,000 ரூபாய் என்ற தண்டப் பணம் ஒரு இலட்சம் ரூபாவாகவும், ஐந்து இலட்சம் ரூபாய் இருந்த அபராதம் 50 இலட்சம் ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை திருத்தச் சட்டமூலம் திருத்தமின்றி பாராளுமன்றில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டமையை அடுத்து இந்த அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு 3 மணித்தியாலங்களுக்குள் பி.சி.ஆர்.

கொழும்பு, செப். 24

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோருக்கு 3 மணித்தியாலங்களில் பி.சி.ஆர் முடிவுகளை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட ஆய்வுகூட கட்டமைப்பு நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அதன்படி, எதிர்வரும் சனிக்கிழமை முதல் இதனூடாக பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(அ)

# பாடசாலைகள் மீள ஆரம்பம் பல தரப்புகளுடன் அரசு பேச்சு

கொழும்பு, செப். 24

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின்படி அடுத்த சில நாள்களில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது குறித்து பல தரப்பினருடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி நடவடிக்கைகள் மீண்டும் தொடங்குவதற்கு முன்பு பாடசாலைகளில் தூய்மைப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

“சுகாதார வழிகாட்டுதலின்படி 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளைத் திறக்க ஆசிரியர்களும் உதவுவார்கள் என்று நம்பப்படுகிறது.

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டமும் விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, க.பொ.த உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கு முதலில் தடுப்பூசி போடப்படும்” என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார்.

(அ)

# இலங்கையருக்கு ‘பூஸ்டர்’ தடுப்பூசி வழங்க இறுதி முடிவு இன்னுமில்லை

கொழும்பு, செப். 24

இலங்கையர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியின் மூன்றாவது அலகு (பூஸ்டர் தடுப்பூசி) வழங்குவதற்கான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

12 முதல் 19 வயதுக்குட்பட்ட நாள்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு மட்டுமே கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இன்று முதல் கொழும்பு, அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இந்தப் பணி முன்னெடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையிலும் மற்ற இரண்டு மாவட்டங்களில் உள்ள கிளினிக்குகளிலும் தடுப்பூசி போடப்படும் என்று இராணுவத் தளபதி கூறினார். “தேவைப்பட்டால் மூன்றாவது அலகு தடுப் பூசிக்கு முற்பதிவு கொடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இரண்டாவது அலகைப் பெற்ற பிறகு மூன்றாவது அலகைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடு உள்ளது. சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகள் இந்த விடயத்தில் உத்தரவுகளை வெளியிடுவார்கள். மருத்துவ வல்லுநர்களின் பரிந்துரைகளை பரிசீலித்த பின்னர் செயலணியின் கூட்டத்தில் ஜனாதிபதி இறுதி முடிவை எடுப்பார்” என்றும் இராணுவத் தளபதி கூறினார்.

# ஆசிரியர்கள் விசாரிக்கப்பட்டமை; எனக்கு தொடர்பு எதுவுமே இல்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறார் அமைச்சர் வீரசேகர



**கொழும்பு, செப்.24**

**வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் சிலரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரிப்பது தொடர்பாக சில தரப்பினர் தன் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளை, கடுமையாக மறுப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் மெய்நிகர் முறையில் கற்பிக்கும் ஆசிரியர்களை, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றவர்கள் அச்சுறுத்தியாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றை முன்வைத்தது, வேலை நிறுத்தத்துக்கு எதிரான ஆசிரியர்கள் எனவும் அவ்விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை எனவும் அமைச்சர் அதன் போது தெரிவித்தார்.

வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவது பொதுமக்களின் ஜனநாயக உரிமையாக காணப்பட்டாலும் பெரும்பான்மையான ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் இணைந்து கொண்டிருப்பது அவர்களின் விருப்பத்துக்கன்று கட்டாயப் படுத்தலுக்கே எனச் சுட்டிக் காட்டிய வீரசேகர, அழைப்புகளை மேற்கொண்டு ஆசிரியர்கள் தனக்கு அது தொடர்பில் அறிவுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளிலும் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இன்று தெற்கிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மாத்திரமே அநாதரவாக உள்ளனர்.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலமையாகும். அதனால் மாணவர்களின் எதிர்காலத்தை கவனத்திற் கொண்டு கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு நான் ஆசிரியர்களை அன்பாக கேட்டுக் கொள்கின்றேன். என்று அமைச்சர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்துவது பாரதூரமான குற்றமாகும் என மேலும் சுட்டிக்காட்டிய அமைச்சர் சரத் வீரசேகர, வேலை நிறுத்தத்தை கருத்திற் கொள்ளாது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களை ஒரு வார்த்தையிலேனும் அச்சுறுத்தினால், அவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவதாக சுட்டிக்காட்டினார்.

# இலங்கை-ரஷ்யா இடையிலான விமான சேவைகள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 24

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

நவம்பர் 4ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, மொஸ்கோ மற்றும் கொழும்புக்கு இடையில் வாரத்துக்கு இரண்டு தடவைகள் விமான சேவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா வைத்தியசாலையில் உறவினர் தொற்றாளர்களை பராமரிக்க அனுமதி!

வவுனியா, செப். 24

கொரோனா தொற்றாளர்களை பராமரிக்க நோயாளர்கள் விடுதியில் உறவினர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் வவுனியா வைத்தியசாலையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளர் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வரும் நிலையில் உறவினர்கள் எவரும் அருகில் இருந்து பராமரிக்க அனுமதிக்கப்படாமையால் நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் அதிகளவான மன அழுத்தத்துக்கு உள்ளாகி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுகாதார அமைச்சு இலங்கையில் முதற் கட்டமாக வவுனியா மற்றும் மொனராகலை வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கு உறவினர்களை அனுமதிக்க திட்டமிட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் க.ராகுலனிடம் கேட்டபோது,

வவுனியா வைத்தியசாலைக்கும் குறித்த நடைமுறை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து இந்த நடைமுறையை ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

நோயளார்களின் உறவினர்களுக்கு ஒரு மணி நேரப் பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் கொரோனா விடுதிக்கு செல்வதற்கான பாதுகாப்பு அங்கிகள் முழுமையாக அணிந்து செல்ல அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் அனைத்து நோயாளர்களின் உறவினர்களையும் ஒரே தடவையில் அனுமதிக்க முடியாது. ஒரே தடவையில் மூவர் என்ற ரீதியில் அனுமதிக்கப்பட்டு அவர்கள் அனைத்து நோயாளர்களுக்கும் உதவும் வகையில் விடுதிக்குள் செல்வார்கள். இதனை ஒரு பொறிமுறையின் கீழ் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்-என்றார்.

# இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டோரில் 65 முதல் 70 வீதமானோருக்கு தொற்று அபாயம்!

கொழும்பு, செப். 24

கொரோனா வைரஸ் தொற்று அபாயத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக இரண்டு தடுப் பூசிகளையும் பெற்றிருந்தாலும், சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றாதோருக்கு மீண்டும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

சமுதாய மருத்துவ விசேட நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி தமது ருவிற்றர் பதிவொன்றின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றாத இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டோரில் 65 முதல் 70 சதவீதமானோருக்கு கொரோனா தொற்று உறுதியாவதாக புதிய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசி செலுத்துவதால் மரணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமே தவிர, தொற்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது எனவும், தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டாலும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் பேராசிரியர் சுனெத் அகம்பொடி வலியுறுத்தியுள்ளார்.

# அரசியலில் இருந்தே ஒதுங்க நான் தயார்!

## பந்துல பகிரங்க சவால்!



கொழும்பு, செப். 24

“எனது அமைச்சிலோ அல்லது அமைச்சின்கீழ் இயங்கும் நிறுவனங்களிலோ நானோ எனது குடும்ப உறுப்பினர்களோ எந்தவொரு மோசடியிலும் ஈடுபட்டது கிடையாது. ஒரு ரூபாவேயனும் ஊழல் இடம்பெற்றுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வது மட்டுமல்ல, அரசியலில் இருந்தே ஒதுங்கிவிடுவேன்.”

இவ்வாறு வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.



# மன்னாருக்கு ஞானசாரர் புதன் திடீரென விஜயம்!

மன்னார், செப். 24

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோயில் மோட்டை பகுதிக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோயில் மோட்டைப் பகுதியில் சுமார் 40 வருடங்களாக மக்கள் விவசாயம் செய்து வந்தனர்.

இந்த நிலையில் குறித்த அரச காணியை தங்களுக்கு வழங்க வேண்டும் என கோவில் மோட்டை விவசாயிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டதோடு, பல போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் குறித்த காணியை கோயில் மோட்டை விவசாயிகளுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், குறித்த காணி தங்களுக்கு வேண்டும் என மடு தேவாலயப் பரிபாலன சபையினர் கோரி வந்ததுடன் குறித்த காணியை பெற்றுக்கொள்ள பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந் நிலையில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கொரோனா இல்லாத இலங்கை உருவாகவேண்டும் என நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை இடம்பெற்ற விசேட பூசையில் பங்கேற்க பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அவரை இடையில் வழிமறித்த கோயில் மோட்டை விவசாயிகள், தங்களின் காணி பிரச்னையை தீர்த்து தருமாறு கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் கோயில் மோட்டை வயல் காணிக்கு பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

அதை தொடர்ந்து கருத்து தெரிவித்த பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்,தேவாலயங்களுக்கு காணிகளை வழங்குவதை விட மக்களின் பசியை தீர்ப்பதே முக்கியம் . குறித்த காணியை கோயில் மோட்டை விவசாயிகளுக்கு பெற்றுத்தர தன்னால் இயன்ற நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை வாங்கிய அமெ. நிறுவனம்!

கொழும்பு, செப். 24

தென்னிலங்கையின் கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்துடன் கையொப்பமிட்டதாக அமெரிக்காவின் நியூ போட்ரெஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கு அப்பாலுள்ள கடலில் இயற்கை திரவ வாயு முனையம் ஒன்றை நிர்மாணித்தல், கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையம் வரை குழாய் கட்டமைப்பை அமைத்தல் ஆகியன ஒப்பந்தத்தில் அடங்குவதாக அமெரிக்க நிறுவனம் நேற்று முன்தினம் பகிரங்கப்படுத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது. கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையம் ஏற்கனவே 310 மெகாவாட் கொள்ளளவை கொண்டிருப்பதுடன், 2023 ஆம் ஆண்டளவில் மேலதிகமாக 700 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் மின்சக்தி அமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவிப்பார் என நம்புவதாக அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

திறைசேரி தகவல்களுக்கு அமைய, கால எல்லையுடனான உடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என அறியக்கிடைத்ததாகவும் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் பாராளுமன்றத்தில் தெளிவூட்டப்படும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை மீண்டும் பலப்படுத்த சு.கவினர் திட்டம்

## கடந்த வாரம் முக்கியத்துவம்மிக்க சந்திப்பு

கொழும்பு, செப். 24

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீண்டும் பலப்படுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.**

மேற்படி கூட்டமைப்புக்கு கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே தலைமைத்துவம் வழங்கியது. எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உதயமான பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வலுவிழந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னம் வெற்றிலை சின்னமாகும். மஹிந்தவுக்கு பிரதான தேர்தல்களின்போது வெற்றியை தேடிக் கொடுத்த சின்னமாகும். இதனால்தான் வெற்றியின் சின்னம் வெற்றிலைச் சின்னம் என்று மஹிந்த ராஜபக்ஷ அடிக்கடி கூறிவந்தார்.

சுதந்திரக்கட்சி தற்போது பலவீனமடைந்து, 'மொட்டு' கட்சியிடம் சரணடைந்துள்ளது. இந்நிலையில்தான் கூட்டணியை பலப்படுத்துவதற்கான முயற்சியில் அந்தக் கட்சி இறங்கியுள்ளது. இது தொடர்பில் கடந்த வாரம் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என தெரியவந்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அங்கம் வகித்தது. எனவே, புதிய கூட்டணியில் அக்கட்சி இணையுமா என்ற வினா எழுந்துள்ளது.

# காங்கேசன்துறையில் வீடொன்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 24

காங்கேசன்துறை பகுதியில் வீடொன்றில் இருந்து முதியவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீமன்காமம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் கடந்த சில தினங்களாக வீட்டை விட்டு வெளியே வராத நிலையில் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் வீட்டின் கதவை உடைத்து பார்த்தபோது முதியவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த முதியவர் சில நாட்களுக்கு முன்னரே உயிரிழந்து விட்டார் எனவும், அதனால் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும் சம்பவம் தொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# வவுனியா வைத்தியசாலைக்கு உபகரணங்கள் கையளிப்பு!



வவுனியா, செப். 24

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், வவுனியா மாவட்ட கமநல சேவை நிலையங்களின் நிதிப் பங்களிப்பில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

கொரோனா தொற்று நோயாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் அதனை கருத்தில் கொண்டு குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

10 ஒட்சிசன் சிலிண்டர்கள், மூன்று கட்டில்கள் என 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இதன்போது வழங்கப்பட்டன.

குறித்த உபகரணங்களை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விஸ்ணுதாசன் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் க. ராகுலனிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

(அ)

# போராட்டங்களை ஒடுக்கவே அரசின் அவசரகால சட்டம்

## முன்னிலை சோஷலிச கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 24

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், நகைச்சுவைத்தனமான சட்டமாக மாறியுள்ளது. அத்துடன், எதிர்காலத்தில் போராட்டங்களை ஒடுக்குவதற்காக அவசரகால சட்டத்தை அரசு பயன்படுத்தக்கூடும் - என்று முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரச்சார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதாம். பஸ்கள் மட்டும்தான் ஓடுவில்லை. ஏனைய எல்லா விடயங்களும் இடம்பெறுகின்றன. எனவே, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் என்பது நகைச்சுவைதனமாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் போராட்டங்களை ஒடுக்குவதற்கே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை அரசு பயன்படுத்தியது. எனினும், அம்முயற்சி கைகூடவில்லை.

தற்போது அவசரகால சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. உணவு விநியோகத்துக்கே அச்சட்டம் எனக்கூறப்பட்டாலும் அதன் உண்மையான நோக்கம் எதிர்காலத்தில் தெரியவரும். ஜனாதிபதிக்கு தேவையான வகையில் அச்சட்டத்தை பயன்படுத்தலாம். குறிப்பாக போராட்டங்கள் ஒடுக்கப்படலாம்.

போராட்டம் நடத்த வேண்டியதில்லை. துண்டிப்பிரசுரம் விநியோகித்தாலும், போராட்டத்துக்கான அழைப்பு விடுத்தாலும் மேற்படி சட்டத்தை பயன்படுத்தி கைது செய்யலாம். எனவே, அவசரகால சட்டத்தை இந்த அரசு எவ்வாறு பயன்படுத்தும் என்பது எதிர்காலத்தில் தெரியவரும்-என்றார்.

# அஜித் நிவாட் கப்ராலின் நியமனத்தை இரத்து செய்யுமாறு உரிமை மீறல் மனு

கொழும்பு, செப். 24

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டதை இரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் குறித்த இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# இலங்கைக்கு பிரித்தானிய பிரஜைகள் அவசியமானால் மட்டும் பயணிக்குக!

கொழும்பு, செப். 24

அத்தியாவசிய காரணங்களுக்காக மட்டும் பிரித்தானியர்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு பிரிட்டன் வெளியுறவு மற்றும் பொது நலவாயச் செயலகம் அறிவுறுத்தியுள்ளது.

கோவிட் பரவல் நிலையைக் கருதி இலங்கையை சிவப்புப் பட்டியலில் வைத்திருந்த பிரிட்டன் நேற்று முன் தினம் முதல் அந்தப் பட்டியலிலிருந்து இலங்கையை நீக்கியது.

எவ்வாறாயினும், குறுகிய அறிவிப்பின் பேரில் இலங்கையில் பயணத்தடைகள், ஊரடங்குச் சட்டம் என்பன ஏற்படுத்தப்படும் என்பதோடு, விமானப் பயணங்களிலும் மாற்றம் ஏற்படக்கூடும் என பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிரித்தானியர்கள் இலங்கைக்கு அத்தியாவசியக் காரணங்களுக்காக மட்டும் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# யாழ். நகரில் நேற்று இரு 'பூட்சிற்றி'களில் சொக்லேட், ஷம்போ திருடியவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் இரண்டு பல்பொருள் அங்காடிகளுக்குச் சென்று வெளிநாட்டு சொக்லேட்டுகள் மற்றும் ஷம்போக்கள் திருடியவர் சில மணி நேரங்களிலேயே பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் உள்ள இரண்டு பல்பொருள் அங்காடிகளில் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்ற நிலையில் சி.சி.ரி.வி காணொலிப் பதிவை வைத்து சந்தேக நபர் நண்பகல் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபரே கைது செய்யப்பட்டார்.

அவர் இரண்டு பல்பொருள் அங்காடிகளுக்கு நேற்று காலை சென்று தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சொக்லேட்டுகள் மற்றும் ஷம்போக்களை திருடி ஆடைக்குள் மறைத்து வெளியேறியமை சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியிருந்தன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்று சி.சி.ரி.வி காணொலி பதிவுகளைப் பார்வையிட்ட யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சில மணிநேரத்துக்குள் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(அ)

# நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத்தூபியை சுற்றி பொலிஸ்!

யாழ்ப்பாணம், செப். 24

நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றி பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் நபர்களை கைது செய்யும் வகையில் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள கோவிட்-19 தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு அமைய இந்த நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு உயர் மட்டத்திலிருந்து பணிக்கப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.


அதற்கு அமைய யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட மூவர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்திய - இலங்கை அரசுகளிடம் நீதி கோரி 5 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில், உணவு ஒறுப்பை ஆரம்பித்த தியாக தீபம் திலீபன் 11ஆவது நாளான செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்நீத்தார்.

நல்லூர் நினைவேந்தல் தூபிக்கு சென்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஈகச் சுடர் ஏற்றி, திலீபனின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# போருக்கு பின் மன்னாரில் இடம்பெற்ற அராஜகங்கள் குறித்து விசாரணை தேவை



## கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை

போருக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் சைவர்களை இலக்கு வைத்து ஆயர் இல்லத்தினால் அராஜகங்கள் நடத்தப்படுகின்றன எனக்குற்றச்சாட்டுத் தெரிவித்து, அவற்றை விவரித்து, அவை தொடர்பில் ஆணைக் குழு அமைத்து விசாரணை நடாத்துமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் இலங்கை சிவ சேனைத் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சச்சிதானந்தத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

400 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வந்த பிரான்சிஸ் சேவியர் சிலாபத்தில் தலை காட்டவே இல்லை. மன்னாருக்கு வந்தார். மதவெறிப் போர்க் கோலம் கொண்டார். சைவர்களை முடமாக்கினார், வதைத்தார், கொன்றார். குருதி தோய்ந்த இன ஒழிப்பு வரலாற்றின் நாயகன் அவர்.

பிரான்சிஸ் சேவியரின் கொடுமைகளைச் சைவர்கள் மனத்தில் கொள்ளவில்லை. சிலாபத்தில் உடைப்பில் அவர் பெயரில் உள்ள, 1848இல் கட்டிய, தேவாலயத்தைப் பேணுவோர், பாதுகாப்போர் சைவர்களே.

சிற்றாறுகளின் முகத்துவாரங்கள் சிதறிய கரையோரம். செவ்வானத்தில் தண்ணொளிப் பிழம்பாய்ச் சூரியன் கடலுள் மறைவதைக் காணக் கண் கோடி வேண்டும். சிலாபத்துக்கு வடக்கே முந்தலுக்கு மேற்கே திறந்த வெளி இடையீட்டுக்கு அப்பால் குடிகள் நெருங்கி வாழும் உடைப்பு சிறுநகர்.

அங்கே ஏறத்தாழ இருபதினாயிரம் மக்கள். 10 அல்லது 15 குடும்பங்களைத் தவிர அனைவரும் சைவர்கள். மகாபாரதத்தின் மாண்புறு பாண்டவர்களின் வழி வந்தவர்கள் எனத் தம்மை அழைப்பவர். திரௌபதை அம்மனுக்குத் திருக்கோயில் கண்டு தீமிதிக்கும் திருவினர்.

பிரான்சிஸ் சேவியர் பெயர்கொண்டதே அங்குள்ள கத்தோலிக்கத் தேவாலயம். அத்தேவாலயத்தில் பயன் கொள்வாரோ மிகக் குறைவு. பாதிரியாரும் வருவதில்லை.

கடல் காற்று இரும்பைக் கறளாக்கும். பழைய கட்டடச் சுவர் உடையும். கதவுகள், நிலைகள் வெயிலுக்கு வெடிக்கும். வழிபடுவோர் இருக்கை வாங்கை வண்டரிக்கும். உரைமேடையும் கட்டவிழ்ந்து சொரியும். கேட்பாரற்றுக் கிடந்த தேவாலயத்தைக் கண்டனர், உடைப்புச் சைவ மக்கள். அந்தோ! அந்தோ! அவை ஆன்மீகத்தின் அரும்பொருள் அல்லவா? எனக் கருதினர்.

அருள்மிகு திரௌபதை அம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழுவினர் கூடினர். அழிகின்ற தேவாலயத்தை மீளமைக்கலாமா? அழகாக்கலாமா? தம்மிடையே பேசினர். மீளமைக்கத் தீர்மானித்தனர்.

குழை சாந்தால் சுவர்களைப் பூசினர். காலம் கரைத்த ஓட்டைகளை அடைத்தனர். நிலைகளையும் கதவுகளையும் அழகூட்டிப் பொருத்தினர். வண்ணங்களைச் சுவரிலும் நிலைகளிலும் கதவுகளிலும் பூசினர். கூரை வளைகளைத் திருத்தினர். உடைந்த ஓடுகளை மாற்றினர். வழிபடுவோர் வாங்குகளை வரிசையாக அமைத்தனர். வழிகாட்டும் பாதிரிக்கு மணி மேடை அமைத்தனர். இயேசுபிரான் கருநிலையைத் திருத்தி அமைத்தனர்.

அருகில் உள்ள கட்டைக்காடு சென்றனர். பாதிரியாரை அழைத்தனர். அவர் வந்து போக வண்டி கொடுத்தனர். உடைப்பின் பத்துப் பதினைந்து கத்தோலிக்கக் குடும்பங்கள் ஞாயிறு தோறும் வழிபட வழி செய்தனர். சைவக் கோயிலார் கத்தோலிக்கத் தேவாலயத்தை மீளமைத்த மாண்பு.

இந்த நிலமும் இங்கு பாயும் நீரும் இங்கு எரியும் தீயும் கடற்கரைக் காற்றும் விரிந்த வானும் இசைந்த ஊரே உடைப்பு. பாண்டவர் மரபில் வந்தோர் சைவப் பண்புகளைப் படிப்படியாக வளர்த்த ஊரே உடைப்பு. காலந்தோறும் அல்லன போக்கினர், நல்லன போற்றினர். பரம்பரைகள் ஊடாகச் சைவப் பண்பாட்டை வளர்த்தனர். அப்பண்பாட்டின் மாண்பே இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் மாண்பு. சைவத் திருக்கோயிலார் கத்தோலிக்கத் தேவாலயத்தைப் பேணிக் காக்கும் மாண்பு.

வணக்கத்துக்குரிய கர்தினால் அவர்களே, நீங்கள் பிறந்த இடம் உடைப்புக்குத் தெற்கே 30 அல்லது 40 கிமீ தொலைவிலேயே உள்ளது. நீங்கள் மேய்ப்பர். உங்களைப் பின்பற்றுவோரே கத்தோலிக்கர். 1503 தொடக்கம் 500 ஆண்டுகளாக இலங்கை மண்ணில் கத்தோலிக்கத்தை வளர்க்கச் சைவக் கோயில்களை இடித்த மரபு இடைவிடாது இன்றும் தொடர்கிறது.

400 ஆண்டுகளுக்கு முன்பு திருக்கேதீச்சரத்தை உடைத்து மண்ணோடு மண்ணாக்கினீர்கள். 400 ஆண்டுகளுக்குப் பின்னர் மகாசிவராத்திரி நாளன்று திருக்கேதீச்சர வளைவை உடைத்து, நந்திக் கொடியைக் காலால் மிதித்தீர்கள். சில நாள்களுக்கு முன்னர் (13.09.2021) பரப்புக்கடந்தான் அருள்மிகு பிள்ளையார் கோவிலை உடைத்து இருக்கிறீர்கள்.

ஒன்றல்ல, இரண்டல்ல, நூற்றுக் கணக்கான இத்தகைய நிகழ்ச்சிகளை நான் உங்களுக்குப் பட்டியலிட முடியும்.

மனிதம் பேணும் நியாயத் தராசின் ஒரு தட்டில் பிரான்சிஸ் சேவியர் தேவாலயத்தை மீளமைத்துப் பேணிக் காக்கும் உடைப்புச் சைவ மக்கள். மறுதட்டில் பரப்புக் கடந்தான் அருள்மிகு பிள்ளையாரை உடைத்து அந்தோனியார் சிலையை நிறுவிய மன்னார் ஆயர் வழிநடத்தும் கத்தோலிக்கர்.

மன்னார்க் கத்தோலிக்கரின் அருள்நிலையை மீட்கும் கடன் உங்களுக்கு. கத்தோலிக்கரை வழிநடத்தும் மேய்ப்பர் நீங்கள். மன்னார்க் கத்தோலிக்கர் பிறழ்நிலையை, அட்டூழியத்தைத் தொடராது நிறுத்துவீர்களாக.

இதுவரை நடந்த நூற்றுக்கணக்கான அட்டூழியங்களில் நிலைகளை விசாரித்து அவை தொடராமல் இருப்பதற்கு உரிய வழிவகைகளை ஆராய்வதற்காக உங்கள் அமைப்புக்குள்ளேயே உள்ளக விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமையுங்கள்.

சான்றோர் பல்கிய நாடு இலங்கை. இலங்கையின் நான்கு சமயச் சான்றோர்களை அழையுங்கள். உள்ளக விசாரணை ஆணைக்குழு உறுப்பினராக்குங்கள். விசாரணைகளைத் தொடங்குங்கள்.

- மனித உரிமைகளை மீறினர்.
- அரசியல் அமைப்பு வழங்கிய அடிப்படை உரிமைகளை மீறினர்.
- அரசின் காணிகளையும் சைவர்களின் காணிகளையும் வன்முறையால் ஆக்கிரமிக்கின்றனர்.
- அறத்தை மீறிச் சைவர்களை மதமாற்றிக் கிறித்தவராக்குகின்றனர்.
- மன்னார் குருத்துவக் கல்லூரி மற்றும் அறநெறிப் பாடசாலை போன்றவற்றின் பாடத்திட்டங்களில் சைவர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் பாடங்களை எழுதினர்.
- வழிபாட்டாளர்களைத் தூண்டினர். காடையர்களை அனுப்பினர். மற்றும் கத்தோலிக்கர் முன்னெடுத்த அரசு சார்பற்ற நிறுவனங்களே அட்டூழியராயினர்.
- அரசு விதிகளைப் புறந்தள்ளி அரசின் ஆட்சிப் பணியில் அரசின் பாதுகாப்புப் பணியில் மன்னார் ஆயரும் அவரின் உதவியாளர்களும் தலையிடுவர். இதனால் சைவர்களே பலிக்கடாக்கள்.

இவற்றை விசாரிக்க வேண்டும். போருக்குப் பின் 19 மே 2009இலிருந்து 13 செப்ரெம்பர் 2021 வரையான அட்டூழிய நிகழ்ச்சிகளை விசாரிக்க வேண்டும். ஆட்சியால், ஆவணத்தால் அல்லது காட்சியால் என 800 ஆண்டுகளுக்கு முன் சேக்கிழார் கூறிய சைவ நீதி நெறிமுறைக்கு அமைய, நேரடிச் சாட்சிகளின் வாய்மொழிகள் சாட்சியம் தரக்கூடிய ஆவணங்கள் பதிவாகிய காணொலிகள் யாவற்றையும் சைவர்களாகிய நாம் வரிசையாக்குவோம்.

மன்னார்க் கத்தோலிக்கரின் அட்டூழியங்களாக, 37 நிகழ்ச்சிகளை நான் பின்னிணைப்பாகப் பட்டியலிட்டிருக்கிறேன் நீங்கள் அமைக்கும் விசாரணை ஆணைக்குழு முன்பு சாட்சிகளையும் ஆவணங்களையும் காணொலிகளையும் வரிசைப்படுத்துவோம். வணக்கத்துக்குரிய கர்தினால் அவர்களே, இந்த விசாரணைக் குழுவின் பாரபட்சமற்ற முடிவுகளை யும் விதப்புரைகளையும் நீங்கள் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

நீங்களோ, வத்திக்கானோ இதில் நடவடிக்கை எடுக்காவிட்டால், சைவர்களாகிய நாங்கள் இத்தகைய விசாரணை ஆணைக்குழுவை நியமிக்குமாறு இலங்கை அரசைக் கோருவோம்.

அவர்களும் எங்களுக்குச் செவிசாய்க்காவிடின், நீங்கள் ஏற்கனவே இலங்கை அரசின் மீது குற்றங்களைச் சுமத்தி ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையத்துக்குப் போவதாகச் சொல்லி இருக்கிறீர்களே. உங்கள் வழியைப் பின்பற்றி நாங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்துக்குச் செல்ல உள்ளோம்.

உடைப்பு ஊரின் நல்லிணக்கப் பண்பாட்டின் விரிவாக்கமாக இலங்கைத் தீவு மாற வேண்டும். உடைப்புச் சைவரின் அன்பு, அறம், அருள், இணக்கம், தேசியம், விட்டுக்கொடுப்பு யாவும் இலங்கை மக்கள் அனைவருக்கும் பொதுவாக வேண்டும். உடைப்பு முன்னுதாரணமாக உள்ளதே.

சைவத் தமிழ்ப் புலவர், பரிபாடல் நூலில், யாம் இரப்பவை பொருளும், பொன் னும், போகமும் அல்ல நின்பால் அருளும், அன்பும், அறனும் என 2500 ஆண்டுகளுக்கு முன்னரே சங்க காலத்திலேயே முருகனிடம் வேண்டினார்.

அந்தப் பராம்பரியமே உடைப்பு மக்களின் அரும்பெரும் சொத்து. அக்கோரிக்கைகளே இலங்கை மக்களின், இலங்கை மண்ணின் மரபுசார்ந்தோரின் வாழ்வியலுமாகும். எனவே உங்களின் விசாரணை முன்னெடுப்புகளுக்கு இலங்கையில் உள்ள சைவர்கள் ஆதரவாக இருப்போம்.”

இவ்வாறு இந்தக் கடிதத்தில் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரதிகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்காவுக்கும், ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ■



## தமிழ்நாடு அரசியல்:







# தி.மு.க. கூட்டணியில் என்ன நடக்கிறது?

ஆ.விஜயானந்த்

உள்ளாட்சித் தேர்தல் இடப் பங்கீடு விவகாரத்தில் தி.மு.க தலைமை மீது அதன் கூட்டணிக் கட்சிகள் கடும் அதிருப்தியில் உள்ளன. “கூட்டணியில் கேட்ட இடங்கள் கிடைக்கவில்லையென்றாலும் இணைந்து செயல்பட்டு வருகிறோம். இந்தப் பேச்சில் மகிழ்ச்சியும் உள்ளது, வருத்தங்களும் உள்ளன” என்கிறார் வி.சி.க துணைப் பொதுச்செயலாளர் வன்னி யரசு. என்ன நடந்தது?

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் வரும் ஒக்ரோபர் 6 மற்றும் 9 ஆகிய தேதிகளில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக கடந்த 15 ஆம் திகதி முதல் வேட்புமனுத் தாக்கல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாள் முதலாக, தி.மு.கவும் அ.தி.மு.கவும் கூட்டணிக் கட்சிகளிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன.

அ.தி.மு.க அணியில் இடம்பெற்றிருந்த பா.ம.க, தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துவிட்டாலும் சில இடங்களில் செல்வாக்கின் அடிப்படையில் அ.தி.மு.கவுடன் இணைந்து போட்டியிட உள்ளதாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், ஒன்பது மாவட்ட உள்ளாட்சித் தேர்தலில் கள்ளக்குறிச்சியில் மட்டும் அ.தி.மு.க-பா.ஜ.க இடையே உடன்பாடு எட்டப்படவில்லை. இதையடுத்து, அ.தி.மு.க தலைமையிடம் பா.ஜ.க நிர்வாகிகள் தொடர்ந்து பேசி வருகின்றனர்.

வேட்புமனுத் தாக்கல் 22 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், தி.மு.க, அ.தி.மு.க தரப்பில் மாவட்ட நிர்வாகிகள் வேலையில் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த விவகாரத்தில் கூட்டணிக் கட்சிகளை தி.மு.க கையாண்ட விதம் அதிர்ச்சியளிப்பதாக காங்கிரஸ் நிர்வாகிகள் பேசி வருகின்றனர்.

**ஐந்து விரலும் தி.மு.கவுக்கா?**

“ஓர் ஒன்றியத்தில் 24 உறுப்பினர்கள் இருந்தால் அதில் ஓர் இடத்தைக்கூட தி.மு.க கொடுக்க முன்வரவில்லை என்பது வேதனையான விஷயம். இத்தனைக்கும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் தலைவராக இருந்த பகுதிகளிலும் இதே நிலைதான் நீடித்தது. கருணாநிதி உயிரோடு இருந்த வரையில் கூட்டணிக் கட்சிகளை நல்ல முறையில் அணுகினார். இன்றைக்கு அதுபோல் இருக்கிறதா என்பது கேள்விக்குறி. கூட்டணிக் கட்சிகள் இருந்தால்தான் பலம். ஐந்து விரலை எடுத்துக் கொள்ள வேண்டும் என தி.மு.க நினைக்கிறது. ஆனால், எங்களுக்கு உள்ளங்கை அளவுக்காவது இடங்களைக் கொடுத்திருக்கலாமே?” எனக் கேள்வியெழுப்புகிறார், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் மாநில பொதுச்செயலாளர் ஜி.கே.முரளிதரன்.

தொடர்ந்து, “தி.மு.க மாவட்ட செயலாளர்கள் பலரும், கூட்டணிக் கட்சிகளை மதிக்கவே இல்லை. வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி கிழக்கு மாவட்டம் ஆகியவற்றில் சரியானபடி இடங்களை ஒதுக்கவில்லை. தென்காசியில் மட்டும் ஓரளவுக்கு இடங்களை ஒதுக்குவதற்குக் காரணம், அங்கு பழனி நாடாரின் செல்வாக்குதான். தென்காசியில் 24 ஒன்றிய கவுன்சிலர் இடங்களை ஒதுக்கியுள்ளனர். 150 ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ள இடங்களில் 24 என்பதே குறைவுதான். மற்ற மாவட்டங்களில் மிகக் குறைவான இடங்களே ஒதுக்கப்பட்டன” என்கிறார்.

மேலும், ”எங்கள் கட்சியின் வாக்கு வங்கி அதிகரித்துள்ளது. கிராமங்களில் நாங்கள் வலுவாக இருக்கிறோம். “எந்த ஊரில் காங்கிரஸ் உள்ளது?“ என யாரும் கேட்க முடியாது” என்கிறார். “கூட்டணிப் பேச்சுவார்த்தையில் என்ன நடந்தது என தலைமைக்கும் தெரியும். “இதையும் கடந்து போக வேண்டும், வேற வழியில்லை“ என மேலிடத்தில் கூறுகின்றனர். கட்சியின் அடிமட்ட நிர்வாகிகளுக்கு உள்ளாட்சித் தேர்தல் என்பது முதுகெலும்பாக உள்ளது. இதையும் இழந்தால் சிறு கட்சிகளைப் போல காங்கிரஸ் மாறிவிடும் என்ற அபாயத்தில் பேசுகிறேன். இது தொண் டர்கள் நிற்கக் கூடிய தேர்தல். எங்கள் கட்சியில் கருத்து சொல்லக் கூடிய அடுத்தகட்ட தலைவர்கள் எல்லாம், உள்ளாட்சித் தேர்தல் நேரத்தில் எங்கே போனார்கள் என்றே தெரியவில்லை” என்கிறார்.

**தரவுகளைப் பட்டியலிட்ட தி.மு.க.**

காங்கிரஸ் கட்சியைப் போல விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க, சி.பி.ஐ, சி.பி.எம் ஆகிய கட்சிகளும் அதிருப்தியடைந்துள்ளன. “வார்டு வாரியாக எந்த வீட்டில் யார் இருக்கிறார்கள், அவர்கள் வாக்குகள் யாருக்குப் போகும், அவர் எந்தக் கட்சியின் அனுதாபி, அந்த வீட்டில் மகன் வாக்கு யாருக்கு, அப்பா வாக்கு யாருக்கு?” என்றெல்லாம் துல்லியமான தரவுகளை தி.மு.கவினர் காட்டி யுள்ளனர். அதாவது, “நாம்தான் கவுன் சிலர், தலைவர்” என இலக்கை நிர்ண யித்து தி.மு.கவினர் வேலை பார்த்துள்ள னர். இதனை வி.சி.க உள்ளிட்ட கூட்ட ணிக் கட்சி நிர்வாகிகள் எதிர்பார்க்க வில்லை எனவும் கூறப்படுகிறது. ஒருவழியாக, செங்கல்பட்டு மாவட் டத்தில் திருப்போரூர், திருக்கழுகுன்றம் என இரண்டு ஒன்றிய கவுன்சிலர் இடங் களை வி.சி.கவுக்கு ஒதுக்கியுள்ளனர். மற்ற மாவட்டங்களில் சொல்லிக் கொள்ளும்படியாக இடங்கள் கிடைக்கவில்லை என்கிறார்கள்.

**அதிருப்தியில் ம.தி.மு.க, இடதுசாரிகள்**

வி.சி.கவுக்கு இந்த நிலைமை என்றால், ம.தி.மு.கவும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளது. பல இடங்களில் அவர்கள் விரும்பிய இடங்கள் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்தில் ம.தி.மு.கவுக்கு இடங்களை ஒதுக்கவில்லை. திருப்போரூர் ஒன்றிய ம.தி.மு.க செயலாளர் லோகநாதன், சிறுங்குன்றம் ஒன்றிய கவுன்சிலர் பதவியை எதிர்பார்த்தார். அது அவரின் சொந்த ஊராகவும் இருக்கிறது. அவர் பெயர் பட்டியலில் இருந்தும் கிடைக்கவில்லை. “நமக்கு பெரிதாக மரியாதை கொடுக்கவில்லை. நாம் வருவதை அவர்கள் விரும்பவில்லை“ என்ற குமுறல் ம.தி.மு.கவினரிடம் உள்ளது.

இவர்களைத் தவிர, சி.பி.ஐ, சி.பி.எம் கட்சியினரும் தி.மு.கவின் மாவட்ட செயலாளர்களிடம் போராடியே இடங்களைப் பெற்றனர். அதிலும், பல்வேறு அதிருப்திகளை எதிர்கொண்டுள்ளனர். இதுதொடர்பாக பிபிசி தமிழிடம் பேசிய சி.பி.எம் கட்சியின் மாநில நிர்வாகி ஒருவர், “ஒன்பது மாவட்டங்களிலும் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது. தி.மு.கவோடு கூட்டணி உறவு சரியாக இருக்க வேண்டும் என்பதற்காக சமரசமாகச் சென்றோம். நாங்கள் 4 இடங்களைக் கேட்டால் அதில் ஓர் இடத்தை ஒதுக்கினார்கள். சில இடங்களில் அதையும் தரவில்லை.

ஆளும்கட்சியாக இருப்பதால் அதிக இடங்களில் போட்டியிட வேண்டும் என நினைக்கின்றனர். நாங்கள் செல்வாக்காக உள்ள இடங்களையும் அவர்களுக்கு விட்டுக் கொடுத்தோம். இதில் வருத்தம் இருக்கத்தான் செய்கிறது. தி.மு.கவின் அணுகுமுறையில் சற்று மாற்றம் வந்துள்ளது. அதாவது, தங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொண்ட பிறகே மற்றவர்களின் நலன் என்பதில் அவர்கள் தெளிவாக இருப்பதை இந்தப் பேச்சுவார்த்தையில் உணர்ந்தோம்,” என்கிறார்.

**மகிழ்ச்சியும் வருத்தமும்**

“உள்ளாட்சி இடப்பங்கீட்டில் அதிருப்தி நிலவியது உண்மையா?” என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் வன்னியரசுவிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம். “உள்ளாட்சி அமைப்புகளில் எங்கள் கட்சியின் நிர்வாகிகள் அதிகளவில் போட்டியிட வேண்டும் என விரும்பினார்கள். ஆனால், அந்த இடங்களில் போட்டியிட முடியாத வருத்தங்கள் உள்ளன. நாங்கள் வெற்றி பெறுவதற்கான இடங்கள் அவை. அங்கு போட்டியிட முடியாத அளவுக்கு நெருக்கடி இருந்தது. ஆனாலும், மாவட்ட அளவில் பேசி அதனை ஒழுங்குபடுத்தினோம். கூட்டணியில் கேட்ட இடங்கள் கிடைக்கவில்லையென்றாலும் இணைந்து செயல்பட்டு வருகிறோம். ஒரு சில மாவட்டங்களில் நிறைவாகவும் ஒரு சில மாவட்டங்களிலும் குறைவாகவும் உள்ளது. சில இடங்களில் மகிழ்ச்சியும் உள்ளது, வருத்தமும் உள்ளது,” என்றார்.

தி.மு.க சட்டத்துறை இணைச் செயலாளர் வீ.கண்ணதாசனிடம் பேசினோம். “இது சட்டமன்றம், நாடாளுமன்ற தேர்தல் போல இல்லை. பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாமல் பதவிக்கு வந்த பிறகு, உள்ளாட்சி அமைப்புகளில் அதிகப்படியான இடங்களில் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என நாங்கள் நினைப்பது இயல்பான ஒன்றுதான்” என்கிறார்.

மேலும், “புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்பில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிர்வாகி ஒருவர், அ.தி.மு.க பக்கம் சென்றுவிட்டார். இதுபோல் நடக்காமல் தடுப்பதற்கு இதைவிட வேறு வழியில்லை. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க, பா.ஜ.க ஆகிய கட்சிகளுக்கு எந்த வித வாய்ப்பும் சென்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். அந்தந்த இடங்களில் வெற்றி வாய்ப்புள்ள இடங்களைக் கணக்கிட்டு சதவிகித அடிப்படையில் கேட்பதையும் ஏற்க முடியாது. தென்காசியில் காங்கிரஸ் கட்சிக்கு சற்று செல்வாக்கு இருப்பதால் அங்கு கொடுத்தனர். மற்ற இடங்களில் உள்ள நிலவரங்களையும் கவனிக்க வேண்டும். இதற்காக மற்றவர்களை குறைத்து மதிப்பிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. தேர்தல் என வரும்போது அங்கு வெற்றி மட்டுமே பார்க்கப்படும்” என்கிறார். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II
நேரம் : 1 மணித்தியாலம்

42. பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சேவை எது?
   (1) துவிச்சக்கர வண்டிக்கான அனுமதிப்பத்திரம் பெறல்.
   (2) தொலைந்து போன அடையாள அட்டைபற்றிய முறைப்பாட்டைப் பதிவு செய்தல்.
   (3) வியாபார நிலையங்களுக்கான அனுதிப்பத்திரங்களைப் பெறல்.

43. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணிகள் எவை?
   (1) மயிர்க்கொட்டி, நத்தை (2) ஆந்தை, பருந்து (3) வண்ணத்துப்பூச்சி, தேனீ

44. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தவர் யார்?
   (1) டங்கன்வைற் (2) சுசந்திகா ஜயசிங்க (3) ஜூலியன் போலிங்

45. 'புகும்அணி', 'மறிக்கும் அணி' என இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடப்படும் கிராமிய விளையாட்டு.
   (1) கிளித்தட்டு (2) போர்த் தேங்காய் (3) கட்டம் பாய்தல்

46. இலங்கையில் உலக மரபுரிமைகளாகக் கணிப்புப் பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கை.
   (1) 4 (2) 6 (3) 8

47. நீரினாலும், காற்றினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது?
   (1) மகோகனி, எண்ணை (2) மரமுந்திரிகை, பாகல் (3) கடல்மாங்காய், மகோகனி

48. கிளைகளைக் கொண்ட தாவரம் எது?
   (1) கமுகு (2) கொய்யா (3) கித்துள்

49. நுகத்தடி பயன்படுத்தப்படும் கைத்தொழில் எது?
   (1) மட்பாண்டம் (2) விவசாயம் (3) ஆடை

50. விளக்குமாறு ஒன்றைப் பயன்படுத்திய பின்னர் அதனை வைக்க வேண்டிய சரியான முறை எது?
   (1) நிலத்தில் கிடையாக வைத்தல் வேண்டும்
   (2) ஈர்க்குகள் மேல் நோக்கி இருக்குமாறு வைத்தல் வேண்டும்
   (3) ஈர்க்குகள் தரையைத் தொடுமாறு வைத்தல் வேண்டும்

51. உடலை வளர்க்கும் ஓர் உணவையும், உடலுக்குச் சக்தியைத் தரும் ஓர் உணவையும் முறையே காட்டும் விடை எது?
   (1) பயறு, சோறு (2) பலாக்காய், அன்னாசி (3) பாண், சீனி

52. விற்றமின் B குறைபாட்டினால் ஏற்படக் கூடியது.
   (1) எலும்பு நோய் (2) பசியின்மை (3) கண்பார்வைக் குறைபாடு


53. மென்பானப் போத்தல்களில், அவற்றில் அடங்கியுள்ள சீனி மட்டத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறக் குறியீட்டுத் தொகுதியில் அடங்கும் மூன்று நிறங்களும் எவை?
   (1) சிவப்பு, செம்மஞ்சள், நீலம்
   (2) சிவப்பு, மஞ்சள், பச்சை
   (3) சிவப்பு, நீலம், பச்சை

54. 'ஒடுக்கமான பாலம் முன்னால்' என்பதைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு.




(1) (2) (3)

55. 
உருவில் உள்ளவர்,
   (1) ஆனந்த சமரகோன்
   (2) கலாநிதி ஆனந்த குமார சுவாமி
   (3) F.R. சேனநாயக்க

56. 
வேலையை இலகுபடுத்தப் பயன்படும் இப்பொறியின் பெயர் யாது?
   (1) கஸ்பர் வீல்
   (2) கப்பி
   (3) தபரய

57. 
இங்கு காட்டப்பட்டுள்ள கலைப்படைப்பு,
   (1) கொடி அலங்காரம்
   (2) பலாப்பெத்தி அலங்காரம்
   (3) சுவர் அலங்காரம்

58. நாகமரப் பூங்கா, இளஞ்சிவப்புப் படிக்கல் மலை என்பன காணப்படும் மாவட்டம் எது?
   (1) பொலன்னறுவை (2) மாத்தறை (3) அநுராதபுரம்

59. 


மின்குமிழ் ஒளிரும் வகையில் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றுக்கள் எவை?
   (1) A உம் B உம் (2) C உம் D உம் (3) C உம் B உம்

60. 'பறவைகள் விலங்குகள் மீது நாம் அன்பு காட்ட வேண்டும்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1) ..............................................................
..............................................................
2) ..............................................................
..............................................................
3) ..............................................................
..............................................................

# ஆட்சியை கவிழ்க்க சதி செய்யவில்லை!

## ஆளுங்கட்சி எம்.பி. ஜகத் குமார தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

**"இரு அமைச்சர்களுக்கு எதிராகவே நான் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளேன். அந்த நிலைப்பாட்டில் இன்றும் இருக்கின்றேன். மாறாக அரசுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கோ, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கோ நான் சூழ்ச்சி செய்யவில்லை."**



- இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

அமைச்சர்களான காமினி லொக்குகே, சரத் வீரசேகர ஆகியோருக்கும், ஜகத் குமார எம்.பிக்குமிடையில் கருத்து மோதல் உச்சம் தொட்டுள்ளது. இதனால் அரசுக்குள் முறுகல் நிலையும் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"ஒரு சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டே இரு அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்தேன். அந்த நிலைப்பாட்டிலேயே நான் இன்றும் இருக்கின்றேன். இந்த விடயத்தில் ஊடக கண்காட்சி எதுவும்இல்லை. உண்மையையே நான் சொன்னேன்.

எனது இந்த அறிவிப்பானது அரசை வீழ்த்துவதற்கோ அல்லது அரசுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையோ அல்ல. எமது அரசு கூட்டணி அரசாகும். எனவே, கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது. பலதரப்பட்ட கருத்துகள் வந்தால்தான் மக்களுக்கு சிறப்பான தீர்வை முன்வைக்கலாம். அதற்கான சுதந்திரம் எமது கூட்டணியில் உள்ளது.

ஆனால், அவ்வாறான ஜனநாயக உரிமையை விரும்பாதவர்களே மேற்படி இரு அமைச்சர்கள். இன்று மட்டுமல்ல அன்று முதலலே நான் உண்மையைத்தான் பேசி வருகின்றேன். ஆசிரியர்கள்போராட்டத்தின்போது அவர்கள்கைதுசெய்யப்பட்டவிதத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தேன்" - என்றார். (இ)

# மேலும் 489 பேர் கைது!

கொழும்பு, செப். 24

நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 489 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்று பொலிஸ்தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்போது 29 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 174 வாகனங்களில் வந்த 334 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)



## பாடசாலைகள் விவகாரம்: இன்று முக்கிய அறிவிப்பு

கொழும்பு, செப். 24

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில், பாடசாலைகளை மீளவும் திறப்பது தொடர்பில் இன்று முக்கிய அறிவிப்பு விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் கடந்த இரு நாட்களாகக் கூட்டங்கள் இடம்பெற்றன. இந்தக் கூட்டங்களில் சுகாதார அதிகாரிகளும் பங்குபற்றினர். இதன்போது பாடசாலைகளை மீளத்திறப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கல்வி அமைச்சர் இன்று அறிவிக்கவுள்ளார். (இ)

## இராணுவ 'கப்' வாகனத்தில் மோதுண்டு இரு பொலிஸ் அதிகாரிகள் படுகாயம்!

அநுராதபுரம், செப். 24

அநுராதபுரம் - புத்தளம் பிரதான வீதி, நொச்சியாகம லிந்தவெள பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில், இரு பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விசேட சுற்றிவளைப்பொன்றுக்காக மோட்டார் சைக்கிளில் சென்ற நொச்சியாகம பொலிஸ் அதிகாரிகள் இருவரே இராணுவ 'கப்' ரக வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நொச்சியாகம பொலிஸ் நிலையத்தின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான ஆர்.எம்.எஸ்.சி.ரத்னாயக்க மற்றும் பொலிஸ் அதிகாரியான சுஜீவ சந்தன சுசில் குமார ஆகிய இருவருமே விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். கலாஓயா இராணுவ முகாமுக்குச் சொந்தமான கப் ரக வாகனத்தில் மோதுண்டே குறித்த பொலிஸ் அதிகாரிகள் படுகாய மடைந்துள்ளனர்.

கப் வாகனத்தைச் செலுத்தி வந்த இராணுவச் சிப்பாயைக் கைதுசெய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் சிக்கினார்!

மட்டக்களப்பு, செப். 24

மட்டக்களப்பு, தளவாய் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு தளவாய் பிரதேசமக்களால்வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார், ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளவாய் பகுதியில் விசேட சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்டனர்.



சோதனை நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமான முறையில் ஒருவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த வேளையில் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 7 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் மட்டக்களப்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## உக்ரைன் நாட்டு சுற்றுலா பயணி கடற்கரையிலிருந்து சடலமாக மீட்பு


கொழும்பு, செப். 24

ஹபராதுவ பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கடற்கரையிலிருந்து உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிக்டொப் விக்டர் (வயது 41) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது எனப்பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சுற்றுலா பயணி கடந்த 06 ஆம்திகதி இலங்கைக்கு வந்துள்ளதுடன் ஹபராதுவ, லுனுமோதரை பிரதேசத்தில் தங்கியிருந்துள்ளார்.

குறித்த நபர் கடலில் நீராடிவிட்டு பின்னர் கரையில் படுத்துறங்கியுள்ளார். இதன்போதே அவர் மரணமடைந்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.



பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஹபராதுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வவுனியாவில் மேலும் 94 பேருக்கு தொற்று உறுதி; இருவர் உயிரிழப்பு

வவுனியா, செப். 24

வவுனியா மாவட்டத்தில் மேலும் 94 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 2 பேர் மரணமடைந்தனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 94 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் 2 பேர் மரணமடைந்தனர்.

சாந்தசோலைப் பகுதியில் பெண் ஒருவரும் (வயது 58), தவசிகுளம் பகுதியில் பெண் ஒருவரும் இவ்வாறு மரணமடைந்தனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)



## பெண்கள் நடத்திய உணவகங்கள் ஆப்கானிஸ்தானில் மூடப்பட்டன!

காபூல், செப். 23

ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபின் காபூல் நகரில் பெண்களால் நடத்தப்படும் உணவகங்கள், தேநீர் அருந்தகங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

காபூல் நகரை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அச்சம் காரணமாக எந்தப் பெண் ஊழியர்களும் கடைகளுக்கு பணிக்கு செல்லவில்லை. இதனால் கடைகள் திறக்கப்படவில்லை என்று டோலோ செய்திகள் தெரிவித்துள்ளன.

தலிபான்கள், பெண்களுக்கான உரிமைகளை வழங்குவோம் என்று கூறியிருந்தாலும்கூட அவர்களுக்கான கல்வி உரிமைகூட இதுவரை வழங்கப்படவில்லை. ஆட்சியிலும், அரச நிர்வாகத்திலும்கூட அவர்களுக்கு பங்கு வழங்கவில்லை. இந்த நிலையிலேயே தலிபான்களுக்கு அஞ்சி, பெண்கள் தமது வாழ்வாதாரத்துக்காக நடத்திய உணவகங்கள், அருந்தகங்கள் என்பன தொடர்ச்சியாக மூடப்பட்டுள்ளன. (ஐ)

## மோடியின் விமானத்துக்கு பாகிஸ்தான் அரசு அனுமதி!

புதுடில்லி, செப். 24

இந்தியப் பிரதமர் மோடியின் விமானம் பாகிஸ்தான் வான்வழியாக அமெரிக்கா செல்வதற்கு அந்த நாட்டு அரசு அனுமதி அளித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இதனை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்தவில்லை.

இந்திய பிரதமர் 3 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். வாஷிங்டனில் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஆகியோரை சந்தித்துப் பேசவுள்ளார். இதையடுத்து குவாட் மாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார்.

இந்திய பிரதமர் மோடி பயணித்த போயிங்777-337 விமானம் டில்லியிலிருந்து புறப்பட்டு நேற்று முற்பகல் 11.40 மணி அளவில் பாகிஸ்தான் வான்வழியைக் கடந்ததாக விமானங்களைக் கண்காணிக்கும் பிளைட் ராடார் 24 எனும் இணையதளம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடி பாகிஸ்தான் வான்வெளியாகச் செல்வதற்கு விமானம் புறப்பட்ட பின்புதான் பாகிஸ்தான் அதிகாரிகள் அனுமதியளித்தனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்ரோபரில் பிரதமர் மோடி, சவுதி அரேபியா செல்வதற்கு பாகிஸ்தான் வான்வழியைப் பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாதாரண தடிமனை ஏற்படுத்தும் வைரஸாக கோவிட் - 19 மாறும்!

### ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை கண்டுபிடித்த பேராசிரியை

லண்டன், செப். 24

கோவிட் 19 வைரஸ் பலவீனமடைந்து இறுதியில் சாதாரண தடிமனை ஏற்படுத்தும் வைரஸாக மாறிவிடும் என ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை உருவாக்கிய பெண் பேராசிரியர் ரொம் சாரா கில்பர்ட் தெரிவித்துள்ளார்.

கோவிட் - 19 எதிர்காலத்தில் மிகவும் கொடிய வைரஸாக மாறும் வாய்ப்பில்லை. நோய் எதிர்ப்பு சக்தியை மீறி தொடர்ந்து ஆபத்தான வைரஸாக கொரோனா இருப்பதற்கான அதிக சந்தர்ப்பங்களும் இல்லை.

நாங்கள் ஏற்கனவே நான்கு வெவ்வேறு வகையான கொரோனா வைரஸ்களுடன் வாழ்கிறோம். தற்போது பரவும் சார்ஸ்-கோவி -2 வைரஸூம் வலுவிழந்து அவற்றில் ஒன்றாக மாறும் எனவும் றோயல் சொசைட்டி மருத்துவக் கருத்தரங்கில் பேசிய பேராசிரியர் டாம் சாரா கில்பர்ட் கூறினார்.

ஆனால், சார்ஸ்-கோவி -2 வைரஸ் வலுவிழந்து சாதாரண தடிமனை ஏற்படுத்தும் வைரஸாக மாற எவ்வளவு காலம் எடுக்கும்? அதுவரை அதனைக் கையாள என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? என்பதே தற்போதைய கேள்வி எனவும் அவர் குறிப்பிட்டார்.

59 வயதான பேராசிரியர் ரொம் சாரா கில்பர்ட் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஜென்னர் நிறுவன தடுப்பூசி ஆய்வு அணியை வழி நடத்தியவராவார். இந்த நிறுவனமே ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ரா செனேகா கோவிட் -19 தடுப்பூசியை உருவாக்கியது. இது உலகில் மிகவும் பரவலாக விநியோகிக்கப்படும் தடுப்பூசியாக உள்ளது.

இதேவேளை, எதிர்கால தொற்றுநோய்களைத் தடுக்க தேவையான ஆய்வுகளை மேற்



கொள்ள நிதியைப் பெற்றுக் கொள்ள போராடுவதாக பேராசிரியர் ரொம் சாரா கில்பர்ட் குறிப்பிட்டார். உலகம் முழுவதும் பரவும் பிற தொற்று நோய்களைத் தடுக்க வைரஸ்கள் குறித்து ஆய்வுக்காக அவசர முதலீடு தேவை என்றும் அவர் கூறினார். (ஐ)



## உலகின் சகல நாடுகளுக்கும் பயணித்து யுவதி சாதனை!

வாஷிங்டன், செப். 24

உலகின் அனைத்து நாடுகளுக்கும் பயணித்த இளம் பெண் என்ற சாதனையை படைத்துள்ளார் அமெரிக்காவை சேர்ந்த லெக்சி அல்போர்ட் (வயது 23). அவர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார்.

லெக்சி அல்போர்ட் 196 நாடுகளுக்கும் பயணம் செய்து உள்ளார். இளம் வயதில் உலகின் அனைத்து நாடுகளுக்கும் பயணம் செய்தவர் என்ற சாதனை நிகழ்த்தி உள்ளார் லெக்சி. 2013 ஆம் ஆண்டில் 24 வயதில் ஜேம்ஸ் அஸ்க்வித் நிகழ்த்திய கின்னஸ் உலக சாதனையை லெக்சி முறியடித்துள்ளார். (ஐ)

## மேலும் 50 கோடி தடுப்பூசி அமெரிக்கா அன்பளிக்கும்!

வாஷிங்டன், செப். 24




மேலும் 50 கோடி கொரோனா தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு அன்பளிப்பாக வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் மொத்தம் 100 கோடி தடுப்பூசிகளை தானமாக வழங்கிய நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா பெறக்கூடும்.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பைடனின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் கருத்துரைக்கையில் ”நாளை (இன்று) ஜனாதிபதி பைடன் முறைப்படி மேலும் 50 கோடி பைசர் தடுப்பூசிகளை அமெரிக்கா கொள்முதல் செய்வதற்கான அறிவிப்பை வெளியிடுவார். இதனால் 110 கோடி தடுப்பூசிகளை தானமாக வழங்கிய முதல் நாடு என்று அந்தஸ்தை அமெரிக்கா பெறும். இந்தத் தடுப்பூசிகள் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

இந்த 50 கோடி தடுப்பூசிகளும் அடுத்த ஜனவரி தொடங்கி அனுப்பிவைக்கப்படும். அடுத்த ஆண்டு செப்ரெம்பருக்குள் உலகம் முழுவதுமுள்ள குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு நாடுகளுக்கு 80 கோடி தடுப்பூசிகள் சென்றடையும் என்று கூறினார்.

இதுவரை இலங்கை, பெரு, பாகிஸ்தான், சூடான், எல் சல்வடார், எதியோப்பியா உள்ளிட்ட நாடுகளுக்கு 16 கோடி டோஸ் தடுப்பூசிகள் முன்னரே அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கருதியதைவிட காற்று மாசுபாடு அச்சுறுத்தும்விதமாக உள்ளது!

### வருடாந்தம் 70 இலட்சம் பேர் மரணம் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்து

World Health Organization

ஜெனிவா, செப். 23

முன்னர் கருதியதைவிட காற்று மாசுபாடு மிகவும் அச்சமானதாக உள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. அத்துடன், நைதரசன் நீரொட்சைட் போன்ற காற்றை மாசுபடுத்தும் நச்சுப் பொருட்கள் அதிகரித்துள்ளன என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

மேலும், காற்று மாசுபாட்டுடன் தொடர்புடைய நோய்களால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 70 இலட்சம் பேர் தங்கள் ஆயுட்காலத்துக்கு முன்பாகவே இறக்கின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நடுத்தர மற்றும் ஏழை நாடுகள் தங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மரபுசார் எரிபொருட்களை நம்பியுள்ளதால், அவர்கள்தான் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். புகைப் பிடித்தல் மற்றும் ஆரோக்கியமற்ற உணவை உட்கொள்வது போன்ற பிரச்னைகளுக்கு நிகராக காற்று மாசுபாட்டையும் இணைத்துள்ளது உலக சுகாதார அமைப்பு.

வரும் நவம்பர் மாதம் COP26 உச்சி மாநாடு நடக்கவுள்ளது. அதற்குள், 194 உறுப்பு நாடுகளையும் தங்களின் நச்சுக் காற்று உமிழ்வைக் குறைக்க வலியுறுத்தியுள்ளது உலக சுகாதார அமைப்பு.

நேற்று முன்தினம் வெளியிட்ட புதிய வழிகாட்டலில் பி. எம். 2.5 நுண்துகளின் அதிகபட்சம் சுவாசிக்கத்தக்க அளவு பாதியாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த நுண் துகள்கள் மின்சார உற்பத்திக்காக எரிபொருட்கள் எரிக்கப்படுவதாலும், வீடுகளில் வெப்பமூட்டும் அமைப்புகளாலும், வாகனங்களாலும் உருவாகின்றன.

காற்று மாசுபாட்டுக்கும் இதய நோய் மற்றும் மாரடைப்புக்கும் தொடர்புள்ளது. குழந்தைகள் மத்தியில் காற்று மாசுபாடு நுரையீரலின் வளர்ச்சியைக் குறைத்து, முட்டு நோயை (ஆஸ்துமா) அதிகப்படுத்தும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## செல்ல பிராணிகள் இறந்தால் ஊதியத்துடன் 2 நாள் விடுமுறை!

பொகோடா, செப். 24

செல்லப் பிராணிகள் இறந்தால் இறுதிச்சடங்கிற்காக ஊழியர்களுக்கு 2 நாள் ஊதியத்துடன்கூடிய விடுமுறை அளிக்க கொலம்பிய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குழந்தை இல்லாத சிலர் செல்லப் பிராணிகளையே குழந்தைகளாகப் பார்ப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கொலம்பியாவை ஆளும் லிபரல் கட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அந்த நாட்டில், 10 இல் 6 வீடுகளில் செல்ல பிராணிகளை வளர்க்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட செல்லப் பிராணிகள் உயிரிழந்தால் ஊழியர்களுக்கு விடுமுறை கிடையாது.

யாராவது தங்கள் செல்லபிராணிகள் உயிரிழந்து விட்டதாகப் பொய் சொன்னால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என லிபரல் கட்சி உறுப்பினர் அலெஜான்ட்ரோ கார்லோஸ் சாக்கோ தெரிவித்துள்ளார். (ஐ)

# அஸ்ட்ராவா ஓப்பன் ரென்னிஸ் சானியா இணை காலிறுதியில்!



அஸ்ட்ராவா, செப். 23

அஸ்ட்ராவா ஓப்பன் ரென்னிஸ் போட்டிகள் செக் குடியரசு நாட்டில் தொடங்கி நடைபெற்று வருகிறது .

இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடந்த காலிறுதி ஆட்டத்தின் முந்தய சுற்றில் இந்தியாவின் சானியா மிர்ஷா மற்றும் சீனாவின் ஹூவாய் ஜாங் இணையர் களமிறங்கினர் .

இவர்கள் பிரிட்டனின் தாரா மூர் மற்றும் பெக்டாஸ் இணையரை 6-7, 7-5, 10-7 என்ற கணக்கில் வீழ்த்தினர் . இதன் மூலம் இன்று நடைபெறும் காலிறு திப் போட் டிக்கு சானியா, ஹூவாய் ஜோடி தகுதி பெற்றனர். இந் தப் போட்டியில் கஜகஸ்தானின் அன்னா டானிலினா மற்றும் பெலாரஸின்லிட் சியா மரோசாவா எதிர்கொள்ளவுள்ளனர். (ஐ)

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்

# டில்லியிடம் வீழ்ந்தது ஹைதராபாத் அணி!



டுபாய், செப். 23

நோர்ட்ஜே, ரபாடாவின் வேகத்தின் உதவியுடன் ஹைதரா பாத் அணியை 8 விக்கெட்களால் வீழ்த்தியது டில்லி அணி.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன் தினம் இரவு டுபாயில் நடந்த 33ஆவது போட்டியில் சன்ரை சர்ஸ் ஹைதரா பாத், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணி 9 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்தது. 135 ஓட்டங்கள் எடுத் தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டில்லி அணி 13 பந்துகள் மீதமிருக்கையில் 2 விக் கெட்களை மட்டும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்களால் வென்றது.

இதன்மூலம், டில்லி அணி 14 புள்ளிகளை பெற்று மீண்டும் புள்ளிப் பட்டியலில் சென்னை அணியை பின்தள்ளி முதலிடத் தைப் பிடித்தது. இதேவேளை, 8 போட்டிகளில் விளையாடி, 7 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ள ஹைதராபாத் அணி பிளே ஒவ் சுற்றுக்கு முன்னேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆரம்ப ஓவரிலேயே ஹைதரா பாத் அணியை வேகத்தால் மிரட் டிய நோர்ட்ஜே வோர்ணரை ஓட் டம் எதனையும் எடுக்கவிடாமல் வெளியேற்றினார். அடுத்து கேதார் ஜாதவை 3 ஓட்டங்களு டன் எல். பி. டபிள்யூ . முறையில் ஆட்டமிழக்க செய்திருந்தார்.

ரபாடாவின் 5ஆவது ஓவரில் விருதிமான் சஹா ஒரு சிக்ஸர் அடித்தார். அதே ஓவரில் சஹா வுக்கு (18 ஓட்டங்கள் எடுத்திருந்த போது) பவுன்ஸர் வீசி திணற விட்டு விக்கெட்டை பறித்தார். மனிஸ் பண்டே 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க செய்தார்.

தொடர்ந்து தடுமாற்றமான ஆட்டத்தை ஹைதராபாத் வீரர் கள் விளையாடினர். அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 18 ஓட்டங்களை பெற்ற நிலையில் பட்டேலின் பந்தில் வீழ்ந்தார்.

அப்துல் சமட் 28, ரசீத் கான் 22 ஓட்டங்களைப் பெற்றனர். 20 ஓவர்கள் நிறைவடைய 134 ஓட் டங்களை பெற்றிருந்தது ஹைதரா பாத் அணி.

டில்லி அணிக்காக பந்துவீச்சில் அசத்திய நோர்ட்ஜே 4 ஓவர்கள் வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த் தினார். இவரே போட்டி நாயக னாகவும் தெரிவானார். ரபாடா 3 விக்கெட்களையும், அக்சர் பட் டேல் 2 விக்கெட்களையும் கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா, ஷிகர் தவான் இணை தொடக்கம் கொடுத்தது. பிரித்வி ஷா 11 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், தவானுடன் இணைந்த ஸ்ரே யாஸ் ஐயர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஷிகர் தவான் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 42 ஓட்டங் களைப் பெற்றிருந்தபோது ரசீத் கானின் பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் ஸ்ரேயாஸ் ஐயருடன் இணைந்த ரிஷப் பந்த் அதிரடி காட்டவே, 17.5 ஓவர் களில் 139 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

ஸரேயாஸ் ஐயர் 2 சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 47 ஓட்டங் களையும், ரிஷப் பந்த் 2 சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 35 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைதராபாத்தின் பந்துவீச்சில் கலீல் அஹமட், ரசீத் கான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப் பற்றினர். (ஐ)

# எல். பி. எல். ரி-20 தொடர் டிசம்பர் 4இல் ஆரம்பம்!




கொழும்பு, செப். 24

எல். பி. எல். என்றழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக் இருபது - 20 போட்டியின் இரண்டாவது தொடர் எதிர்வரும் டிசம்பர் 04 ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

5 அணிகள் மோதும் இந்தப் போட்டியில் அணி ஒன்று 14 இலங்கை வீரர்களும் 6 வெளிநாட்டு வீர்களுமாக 20 பேர் வரை வைத்திருக்க முடியும்.

வெளிநாட்டு வீரர்களை பதிவு செய்வதற்கான செயல் முறை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. வெளிநாட்டு வீரர்கள் அந்த நாடுகளின் தேசிய அணியை பிரதிநிதித்துவப் படுத்தியிருக்க வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நடந்த முதலாவது தொடரில் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயிற்றுநரை விலக்கினார் ருமேனியாவின் சிமோனா!



புசாரெஸ்ட், செப். 24

ரென்னிஸ் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான சிமோனா ஹாலேப் தனது பயிற்றுநரான டெரன் காஹில்லை பதவியிலிருந்து விலக்கியுள்ளார்.

இது குறித்து அவர் தனது ருவிற்றர் பதிவில், “காஹில் உடனான 6 ஆண்டு கால பயிற்சி காலம் அற்புதமானது. அவருடன் இணைந்து பணியாற்றுவதை முடிவுக்கு கொண்டு வர இதுவே சரியான நேரம் என்று கருதுகிறேன். என்னை சிறந்த ரென்னிஸ் வீராங்கனையாக உருவாக்கிய அவருக்கு நன்றி’ என்று தெரிவித்துள்ளார்.

டெரன் காஹிலின் பயிற்சியின் கீழ் தனது முதலாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை (2018 பிரெஞ்சு ஓப்பன்) கைப்பற்றிய 29 வயதான ஹாலெப் ரென்னிஸ் தரவரிசையில் முதலிடத்தையும் பிடித்தார். அண்மையில் நடந்த அமெரிக்க ஓப்பன் ரென்னிஸில் 4ஆவது சுற்றில் தோல்வி அடைந்து வெளியேறினார்.(ஐ)

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 02 - 06 - 1949



உதிர்வு 22 - 09 - 2021

### திருமதி சறோஜினிதேவி பேரின்பம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் Nyborg ஐ வதிவிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி பேரின்பம் அவர்கள் (22.09.2021) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரட்ணம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், Dr. பேரின்பம் அவர்களின் பாசமிகு மனைவியும், ரமேஸ்குமார், சசிகுமார், இன்பகுமார், சதிஸ்குமார், தனேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்,நிகஜா, துசியந்தி, நிந்துஜா, உமாதேவி, கல்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரத்னதேவி, ரத்னசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,பத்மாவதி, சற்குணசிங்கம், சத்தியானந்தம், நவரட்ணசிங்கம், தயாளினி ஆகியோரின் அன்பு அண்ணியாரும், புவிதா, டிசாணியா, கிரண்யா, ரிவ்யா, சபினா, அஸ்வினா, டிவானா, அட்விக், சகானா, கிசாந்த், பாவனா, கிரித்திக், நதிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


*கிரியை*
Wednesday, 29 Sep 2021 8:00 AM - 12:00 PM
Nyborg Kirkegårdskapel Kronprinsensgade 34, 5800 Nyborg, Denmark
*விருந்து உபசாரம்*
Wednesday, 29 Sep 2021 12:00 PM
Billardklubben Nyborg Johs. Høirupsvej 90, 5800 Nyborg, Denmark

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
*இன்பா - மகன்: +4540922918*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

மலர்வு 01 - 03 - 1937



உதிர்வு 22 - 09 - 2021

### வினாயகர் பாலரத்தினம்

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட வினாயகர் பாலரத்தினம் (22.09.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாயகர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஆசை மகனும் ராஜமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிராசா, செல்வராசா, குணராசா, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சிதமலர், பூலோகநாயகி, காலஞ்சென்ற நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தி, சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வன்னியசிங்கம், ஜெயமூர்த்தி ஆகியோரின் அருமை மாமனாரும், நடனசுரேஸ், தர்சினி, கௌரி, குமுதினி ஆகியோரின் பெரிய தந்தையும், மயூரன், சின்னவன், காலஞ்சென்ற குட்டி, கண்ணா, ரூபா, மனோஜ், கஜானன், கஜேதன், ரஜி, தர்சிகா, பிரியா, ஜனா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஸ்வின், தவின், சாத்விகா, அக்சிரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
வசந்தி: 077 922 4663
கௌரி: 077 672 6047
ஜெயந்தி : 075 226 3574

*தகவல்:*
**மயூரன் (பேரன் - கனடா)**
**0016472017576**

# கஜேந்திரன் எம்.பி. கைது: கூட்டமைப்பினர் கண்டனம்

## நினைவேந்தலை தடை செய்ய முடியாது எனவும் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.24**

**நல்லூரில் தியாக தீபம் திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*“நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதே போன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத் தடைகளும் விதிக்க முடியாது.*

*எந்தவோர் அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஒரு மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.*

*கஜேந்திரன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தையேனும் வழங்காது அவரை இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று பொலிஸார் கொண்டு சென்றனர். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மை யாகக் கண்டிக்கின்றது” - என்றார்.* *(இ)*

# ஞானசாரர் பேசினால் இனவாதம் இல்லையா?

## சபையில் சாணக்கியன் எம்.பி. கேள்வி

*கொழும்பு, செப். 24*

*“பாராளுமன்றத்தில் முக்கிய சட்ட மூலங்களையும், திருத்தங்களையும் செய்வதற்கு முஸ்லிம் உறுப்பினர்கள் உதவி தேவை. ஏனைய நேரங்களில் அவர்கள் அனைவரும் கெட்டவர்களா?” எனக் கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், “ரிஷாத் பதியுதீன், அஸாத் ஸாலி பேசினால் இனவாதம். ஆனால் ஞானசாரர் பேசினால் அது இனவாதம் இல்லையா?” எனவும் கேள்வி எழுப்பினார்.*

*பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*“பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலிக்கு விஜயம் செய்திருந்தபோது, மக்கள் அவருக்கு எதிர்ப்பைத் தெரிவித்து கோஷங்களை எழுப்பியிருந்தனர். இந்தநிலையில் அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கோஷங்களை மக்கள் எழுப்பியுள்ளனர்.*

*கடந்த காலங்களில் இவ்வாறு கோஷங்களை எழுப்பியவர்கள் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களாகவே காணப்பட்டனர். இன்று நாங்கள் பார்த்தால் நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களே இவ்வாறு கோஷங்களை எழுப்புகின்றனர்.*

*இவ்வாறு கோஷங்களை எழுப்புவதற்கான பிரதான காரணங்களாக நாட்டில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு, நாட்டில் எரிவாயு இல்லை. அதே போன்று நாட்டில் உரம் இல்லை, சீனி கொள்வனவில் மோசடி, பி.சி.ஆர். செய்வதில் மோசடி. இவற்றுக்கு எல்லாம் ஜனாதிபதி, பிரதமர் மாத்திரம் காரணம் இல்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுமே காரணம்.*

*நாங்கள் இன்று வனஜீவராசிகள் அமைச்சு குறித்து பேசிக் கொண்டிருக்கின்றோம். வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர்தான் காடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அவர் அம்பாறையில் காடுகளை அழித்து மரமுந்திரிகை செய்கின்றார். தகுதி இல்லாதவர்களுக்கு ஆசனங்களை வழங்கி அவர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்கினால் இந்த நிலைதான் ஏற்படும்.*

*தற்போது ஞானசார தேரர் கடும் இனவாதப் போக்குடன் செயற்பட்டு வருகின்றார். அவரது கருத்துக்களும் அவ்வாறே உள்ளது. நாங்கள் இனவாதமாகச் செயல்படும் மதத் தலைவர்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.*

*இந்த நாட்டில் 500 அடிப்படைவாத கிறிஸ்தவ தேவாலயங்கள் இருப்பதாக ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். அத்தோடு இஸ்லாமிய தலைவர்களைக் கைதுசெய்யுமாறும், ஜனாதிபதியைப் பதவிக்குக் கொண்டு வருவதற்காக சுமார் 800 முறை மத வழிபாடுகளில் ஈடுபட்டதாகவும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.*

*அடிப்படைவாத தாக்குதல்தாரிகளுக்குச் சூத்திரதாரி அல்லாஹ்தான் என்று ஞானசார தேரர் சொல்கிறார். அவரின் கருத்தைக் கண்டிக்கின்றேன்.*

*இந்தக் கருத்து தொடர்பில் முஸ்லிம் எம்.பிக்கள் மௌனம் காப்பதேன்? எந்த நேரத்திலும் இலங்கையில் தாக்குதல் நடக்கலாம் என்று ஞானசார தேரர் கூறுகின்றார். அப்படியானால் முதலீட்டாளர்கள் எப்படி நாட்டுக்கு வருவார்கள்?*

*பாராளுமன்றத்தில் முக்கிய சட்ட மூலங்களையும், திருத்தங்களையும் செய்வதற்கு முஸ்லிம் உறுப்பினர்கள் உதவி தேவை. ஏனைய நேரங்களில் அவர்கள் அனைவரும் கெட்டவர்களா? எனக் கேள்வி எழுப்ப விரும்புகின்றேன்.*

*ஜனாதிபதி வெளிநாட்டுக்குச் சென்று முஸ்லிம் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுகின்றார். ஆனால், நாட்டில் நடப்பது வேறு விதமாகக் காணப்படுகின்றது.*

*ரிஷாத் பதியுதீன், அஸாத் ஸாலி பேசினால் இனவாதம். ஆனால், ஞானசாரர் பேசினால் அது இனவாதம் இல்லையா? நான் இங்கு உரையாற்றிக் கொண்டிருக்கும்போது இங்கு கூச்சலிடும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் மீண்டும் தனது தொகுதிக்கு வந்தால், அவரைப் போன்றவர்களை மக்கள் அடித்து விரட்ட வேண்டும்” - என்றார்.* *(இ)*

# போதைப்பொருள்களுடன் ஆறு பேர் வசமாக சிக்கினர்

கொழும்பு, செப். 24

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையிலேயே இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 10 கிராம் 70 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர், வத்தளை ஹேக்கித்த பிரதேசத்தில் பயணித்த ஓட்டோ ஒன்றை சோதனைக்குட்படுத்தியபோது, 6 கிராம் 161 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் பெண்ணொருவர் உட்பட இருவர், நுகோகொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 312 கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர், புஞ்சி பொரளை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 102 கிராம் 210 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர், ஜா - எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 320 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் என ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

## மாகாணசபை...

நிலைப்பாடு என அக்குழுவின் தலைவர், சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலை விரைவில் நடத்த முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'எங்கள் மக்கள் சக்தி கட்சி' பாராளுமன்ற விசேட குழுவில் தனது கருத்துக்களை முன்வைத்ததுடன், இந்தக் கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் குழு முன்னிலையில் ஆஜராகியிருந்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள விருப்புவாக்கு முறையை முழுமையாக நீக்குவது பொருத்தமானது எனச் சுட்டிக்காட்டிய அவர், தொகுதிக்குப் பொறுப்பான உறுப்பினர் இருப்பது அவசியமானது என்றும் தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும், கொள்கை ரீதியாக அரசியலை முன்னெடுக்கும் கலாசாரம் உருவாக்கப்படவேண்டும் என்றும் அத்துரலிய ரத்ன தேரர் இங்கு குறிப்பிட்டார்.

தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அளவுகோல்கள் உருவாக்கப்படவேண்டும் என்றும், அரசியல் கட்சிகளுக்கு ஜனநாயகத்தின் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

20ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் அதிகாரம் வேறு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பதாக இந்தக் குழு முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சரும், கட்சியின் நிறைவேற்று அதிகாரியுமான அஜித்.பி.பெரேரா குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதிமன்றம் ஆகிய துறைகளுக்கிடையிலான சமநிலைத் தன்மை பேணப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை தயாரிக்கப்பட்டிருப்பதுடன், இது பிரயோக ரீதியில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் அஜித்.பி.பெரேரா தெரிவித்தார்.

இதேபோல, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையொன்று தயாரிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தேர்தல்கள் தொடர்பான அனைத்து மறுசீரமைப்புக்களின் போதும் வாக்களிக்கும் அதிகாரம் மக்களின் இறைமையின் ஓர் அங்கமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஜனநாயகத்தின் கோட்பாடு இதன் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்துத் தேர்தல்களும் சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் நடத்தப்படுவது அவசியமானதாகும். பாராளுமன்ற, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் யாவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்றும் அஜித்.பி.பெரேரா விசேட குழு முன்னிலையில் வலியுறுத்தினார்.

தேர்தல் பிரசாரங்களுக்கான செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்குப் புதிய சட்டதிட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும் என்பதுடன், இளையோர் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்களில் போட்டியிடுவதற்கு இரட்டைப் பிரஜாவுரிமை தகுதியற்ற விடயமாக்கப்பட வேண்டும் என்றும், தகுதியுடைய சகல வாக்காளர்களையும் பதிவு செய்வதற்கு உரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அஜித்.பி.பெரேரா இங்கு தெரிவித்தார்.

தேர்தல்களில் போட்டியிடும் தரப்புக்களுக்கு அரச மற்றும் தனியார் ஊடகங்களில் வழங்கப்படும் ஒளிபரப்புக் காலம் நியாயமான முறையில் பகிரப்படவேண்டியதன் அவசியத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியது.

தேர்தல்கள் குறித்த கால அட்டவணையொன்று நாட்டில் காணப்படவேண்டும் என்றும், இதன் ஊடாக மக்களின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்த முடியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால.டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ஸ, அலி சப்ரி ஆகியோரும் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர திஸநாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எல்லை நிர்ணய ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

பாராளுமன்ற விசேட குழுவின் அடுத்த கூட்டம் 29ஆம் திகதி நடைபெறும் என இதன் செயலாளரும், பாராளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

## கஜேந்திரன் எம்.பி....

கைதுசெய்யப்பட்டுள்ளமை கடும் கண்டனத்திற்குரிய செயலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுள்ளவை வருமாறு: -

சர்வதேச நியமங்களுக்கும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கும் அமைவாக, விதித்துரைக்கப்பட்ட சிறப்புரிமைகளுக்கு உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தன் இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த தியாகச் செம்மல் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக, ஆயுதமுனையில் அதியுச்ச வன்முறைப் பிரயோகங்களோடு கைது செய்யப்பட்டுள்ளமை இந்த அரசின் கோர முகத்தை இன்னுமொருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது, அவரது சிறப்புரிமைகளை மீறும் வகையில், இந்த ஜனநாயக நாட்டில் இத்தனை மோசமான அரசவன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமையானது, இங்குள்ள சாதாரண தமிழர்களின் இயல்புவாழ்வுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை தெட்டத்தெளிவாக எண்பித்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அமைதியான முறையில் அஞ்சலி செய்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை, ஒரு குற்றவாளியைப் போல் வலுக்கட்டாயமாக பொலிஸார் கைதுசெய்தமைக்கு எனது வலுவான கண்டனங்களைப் பதிவுசெய்வதோடு, அவர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்- என்றுள்ளது.

## மின்னல் தாக்கி...

றிலைக்கேணி சேர்ந்த குயின்ரன் சுதர்சன் (வயது- 35) என்பவர் உயிரிழந்ததுடன், கட்டைக்காட்டைச் சேர்ந்த ஸ்ரனிலஸ் ஜெயக்குமார் (வயது-45) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

நேற்று பிற்பகல் அப்பகுதியில் மழை பொழிந்ததாகவும் அச்சமயம் வெற்றிலைக்கேணி கோரியடிப் பகுதியிலுள்ள வாடியில் நின்றிருந்த மீனவர்கள் மீது மின்னல் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-02-03)

## உடுவில் பிரதேச...

கனவே சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர் என்றும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் கடந்த 16 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன் தினம் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## கஜேந்திரன்...

யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட அவர்கள் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த கைது நடவடிக்கையால் நேற்று நல்லூர் பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை உருவாகியது.

பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனும் அவரது கட்சிப் பிரதிநிதிகளும் தியாகி திலீபனின் நினைவிடத்துக்கு சென்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தியதை அடுத்தே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரைப் பொலிஸார் கைது செய்தவேளை அவரது கட்சிப் பிரதிநிதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டது. இந்த இழுபறிக்குள் கட்சியின் பெண் பிரதிநிதிகளும் கைது நடவடிக்கைக்கு எதிராக பொலிஸாருடன் கடும் வாக்குவாதப்பட்டனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியபோது பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். ஜெயரஜீவ், கட்சி ஆதரவாளர் சிறி ஆகியோரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று வாக்கு மூலங்கள் பெறப்பட்ட பின்னர் , பொலிஸ் பிணையில் விடுவித்த யாழ்ப்பாண பொலிஸார், அவர்களுக்கு எதிராக எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் நபர்களை கைது செய்யும் நோக்குடன் நேற்று வியாழக்கிழமை முதல் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் நேற்று அங்கு அஞ்சலி செலுத்த சென்ற போது , அதற்கு பொலிஸார் தடை விதித்தனர்.

"நீதிமன்ற தடையுத்தரவு இன்றி என்னைத் தடுக்க முடியாது" என கூறிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தடை உத்தரவு இருந்தால் அதனைக் காண்பிக்குமாறு பொலிஸாரிடம் கேட்டார். ஆயினும் அவர்கள் தடை உத்தரவு எதனையும் வழங்கவில்லை.

தடைகளை மீறி கஜேந்திரன் சுடரேற்றியவேளை அதனைப் பாய்ந்து வந்து பாதணியால் தட்டிவிட்ட பொலிஸார், அவரையும் அவருடன் சென்ற இருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று வாக்கு மூலம் பெற்ற பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

கைது நடவடிக்கைக்குப் பின்னர் அங்கு சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் க. சுகாஷ் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். (அ-03)

## திலீபன்...

பொலிஸாரால் பெறப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில், எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடத்த ஏற்பாடாகியுள்ள 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிடுமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரினால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் திலீபனை நினைவுகூரும் நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் கோவிட்-19 பரவல் காரணமாக நடைமுறையில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய நிகழ்வுகளை நடத்த முடியாது. எனவே திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்கவேண்டும் என்று பொலிஸாரினால் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடைகட்டளை வழங்கியது. எனினும், தடைக் கட்டளையில் எவரின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. (அ-02)

## 72 பேர்...

மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 448ஆக அதிகரித்துள்ளது.

நேற்று உயிரிழந்தவர்களில் 30 பெண்களும் 42 ஆண்களும் உள்ளடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஜீ. சி. ஈ. சா/த...

யும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும், அழகியல் பாடங்களுக்கான பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. செய்முறை பரீட்சைகளின் தேக்க நிலை காரணமாக இவற்றின் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்தார்.

டிசம்பரில் நடத்தப்படும் சாதாரண தரப் பரீட்சை தொற்றுப் பரவல் காரணமாக கடந்த மார்ச் முதலாம் திகதி முதல் நடத்தப்பட்டது. இந்தப் பரீட்சைக்கு 6 இலட்சத்து 22 ஆயிரத்து 300இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஊரடங்கை...

யாகத் திறக்கப்படுமானால், நிலைமை இன்னும் மோசமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனவே, படிப்படியாக நாட்டைத் திறப்பது மிகவும் பொருத்தமானது என்றும் இதனால் கொரோனா பரவலுக்கு வழிவகுக்கும் காரணிகள் உள்ளனவா என்று நாம் அவதானிக்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

Eelanadu ஈழநாடு




# நிலுவையில் உள்ள ஒப்பந்தங்களை முடிவுக்கு கொண்டுவர இணக்கம்

## இலங்கை - இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் நேரில் பேச்சு



**கொழும்பு, செப்.24**

**இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி. எஸ்.ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.**

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் பக்க அம்சமாக, நியூயோர்க் நகரில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, கோவிட் - 19 தொற்றுநோய் மற்றும் இதனை கட்டுப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் செயற்படுத்தும் வெற்றிகரமான நடவடிக்கைகள் தொடர்பாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளியுறவு அமைச்சருக்கு விளக்கியுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்தல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம், காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஜீ.எல். பீரிஸ், இந்திய வெளியுறவு அமைச்சருக்கு தெளிவுபடுத் தியுள்ளார்.

அத்துடன், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளில் காணப்படும் முன்னேற்றங்கள் குறித்தும் வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், நாடுகளுக்கு எதிரான தீர்மானங்கள் அந்த நாடுகளின் அனுமதியின்றி செயற்படுத்தப்பட முடியாது என்ற அடிப்படையில் இலங்கை எடுத்த கொள்கை நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதாகவும், வலுவான உள்நாட்டுப் பொறிமுறைகளினூடாக முன்னோக்கிச் செல்லும் போது வேறு எந்த வெளிப்புறப் பொறிமுறைகளையும் இலங்கையால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, இரு நாடுகளினதும் நலன் கருதி, எஞ்சியிருக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான மற்றும் நீதியான தீர்வுகள் அவசியம் என அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, மக்களுக்கிடையிலான தொடர்புகளை அதிகரித்தல் உட்பட பல்வேறு வழிகளில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக அமைச்சர் ஜெய்சங்கர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நேரத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் ஜெய்சங்கர் எடுத்துரைத்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை பலப்படுத்தும் வகையில், நிலுவையில் உள்ள ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இரு அமைச்சர்களும் இணங்கியதாக, இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மொட்டு கூட்டுக்குள் குழப்பநிலை; பிரதமருடனான சந்திப்பு தோல்வி

## ஜனாதிபதியை சந்திக்கும் பங்காளிகள்!

கொழும்பு, செப். 24

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனும் பேச்சு நடத்துவதற்கு ஆளுங் கூட்டணியிலுள்ள பங்காளிக் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.
தொழிற்சங்கங்களும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

அத்துடன், கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் உரிமம் இலங்கை வசமே இருக்க வேண்டும் என மொட்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் 11 பங்காளிக்கட்சிகள் முடிவெடுத்திருந்தன.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று மாலை சந்தித்து பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் பேச்சு நடத்தினர். அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் பங்கேற்றார்.

இச்சந்திப்பின்போது இறுதி இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. எனவே, ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு பங்காளிக்கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

“இன்றைய (நேற்று) சந்திப்பில் பிரதமர் நடுநிலை வகித்தார். எமது தரப்பு கருத்தை முன்வைத்தோம். ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளோம்.” -என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

அமெரிக்க நிறுவனத்துக்கு 40 வீத பங்குகளே வழங்கப்படும். அதுவும் 15 ஆண்டுகளுக்கு. இதன்மூலம் குறைந்த விலையில் மின்சாரத்தை பெறமுடியும் என பொதுஜன பெரமுன கட்சி குறிப்பிட்டுள்ளது.

# வடக்கில் நேற்று 36 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்டத்தில் 23 பேர் உட்பட வடக்கில் 36 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 156 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்.போதனா மருத்துவமனையில் 06 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 04 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 02 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 02 பேர், பலாலி விமானப் படை முகாமில் 03 பேர் என 23 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 05 பேர், பூவரசங்குளம் மருத்துவமனையில் ஒருவர் என வவுனியாவில் 6 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 04 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டனர்.




# நேற்று 1,368 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 24

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 1,368 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 10 ஆயிரத்து 40 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 16 ஆயிரத்து 720 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 742 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திருநாள்,கபாலி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -தமிழ்த் தேசிய அரசியலில் ஒற்றுமை-பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் நிலி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்